விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 24 ஞாயிற்றுக்கிழமை (08.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079




## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா அழுத்தம்

# 13-வது திருத்தச் சட்டத்தை ஆராய அமைச்சர்கள் குழு நியமனம்

## விரைவில் முடிபு தெரியவரும்

(கொழும்பு)

வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் மனிதநேய நடவடிக்கைகள் முடியும் தறுவாயில் இருப்பதால் ஆளும் கட்சியிலிருக்கும் அமைச்சர்கள் குழுவொன்று 13-வது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துதற்கான யோசனைத் திட்டமொன்றைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் எறிகணைத் தாக்குதல் 32 பேர் பலி; 64 பேர் காயம்

(முல்லைத்தீவு)

வன்னியில் நேற்று முன்தினம் நடந்த எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களில் 32 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 64 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைப்பாலை, மாத்தளன் பகுதிகளில் நேற்று முன்தினம் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

உயிர் இழந்தவர்களில் அடையாளம் காணப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு,

இரா.மகேந்திரன் (வயது 32), செல்வராணி (வயது 52), அ.சிறி (14ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை நாளையே இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை-திருகோணமலைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது என யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனினும் நாளை திங்கட்கிழமை காங்கேசன்துறையிலிருந்து பயணிகள் கப்பல் சேவை இடம்பெறுமென குறிப்பிட்டுள்ள யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்ட செயலகத்தில் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச்சீட்டினை (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இலக்குகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன



### திருகோணமலையில் ஜனாதிபதி உரை

(திருகோணமலை)

எதிரிகள் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்ட போதிலும் அரசாங்கப் படையினர் கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட மக்கள் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விமானப் படையினரை கௌரவப்படுத்தும் வகையில் நேற்று திருகோணமலையில் நடைபெற்ற (14ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் தொடரும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு களமுனைகளில் வெவ்வேறு இடங்களில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் குறைந்தது 32 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தினுள்ளே தொடர்ந்து முன்னேறிவரும் இராணுவத்தினர், (14ஆம் பக்கம் பார்க்க)

## சாலைப் பகுதியை ஊடறுத்து விடுதலைப் புலிகள் தாக்குதல்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இராணுவத்தின் 55ஆவது டிவிசன் படையணியின் பின்தளப் பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்பு அணிகள் ஊடறுத்து தாக்கியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சாலையின் தென்பகுதியில் கடுமையான (14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புப் பிரதேசங்கள் தொடர்ச்சியாக மாற்றப்படும்

### அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இராணுவத்தினரால் உருவாக்கப்படும் பாதுகாப்புப் பிரதேசங்களைத் தொடர்ச்சியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது .

விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களுக்கென நிரந்தரமான தொரு பாதுகாப்புப் பிரதேசம் இருக்காது. பொதுமக்களின் நடமாட்டத்திற்கு ஏற்ப இராணுவத்தினர் பல்வேறு பாதுகாப்பு (13ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளித்தது

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தமது அமைப்பிலுள்ள இராணுவப் பிரிவை கலைப்பது என்று ஏற்கனவே எடுத்த முடிபின் பேரில் நேற்று மாலை உத்தியோக பூர்வமாக தம்மிடமிருந்த ஆயுதங்களை பாதுகாப்பு தரப்பினிடம் கையளித்துள்ளது.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இது தொடர்பான வைபவத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தரப்பில் அந்த அமைப்பைச் சேர்ந்த 2 பேர் கிழக்கு பிராந்திய (13ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

B.Sc. in Computer Science

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமுடைய (UGC)

Isles International University (Commonwealth)

இனால் Certificate வழங்கப்படும்

North Lanka IIT

Partner Institution of Isles International University & Representative's Office

Head Office:-Main Street, Chankanai. Phone:- +94(0) 602214305

Jaffna Office:- #95. Arivakulam. Jaffna.

New Batch 10-03-2009 ஆரம்பம்

(C-2188)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈழத்தமிழர் விடயத்தில் காங்கிரஸ்-தி.மு.க.போலிவேடம்

## தமிழருவி மணியன் செவ்வி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை நிகழாமல் இருந்தாலும் கூட ஈழத்தமிழர்களுக்கு இந்திய அரசாங்கம் மிகப் பெரிய அளவில் முன்வந்து துணை நின்றிருக் காது என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் பொதுச் செயலாளராக பதவி வகித்து அண்மையில் விலகிய தமிழருவி மணியன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (03.03.09) ஒலிபரப்பாகிய செய்தி அலைகள் நிகழ்ச்சிக்கு தமிழருவி மணியன் வழங்கிய நேர்காணல்;

**தமிழக மக்கள் மத்தியில் இதுவரை இல்லாத அளவுக்கு தற்போது பாரிய உணர்வெழுச்சி ஏற்பட்டிருக்கிறது. கடந்த காலத்தோடு ஒப்பிடுமிடத்து இதனை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இதுவரை இல்லாத அளவுக்கு தமிழக மக்களிடையே ஈழத்தமிழர் உணர்வலை மிகப் பெரியளவில் பெருகியிருக்கிறது என்பதைதான் நாம் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான செய்திகள் வந்த நேரத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உணர்வே தமிழகம் தழுவிய அளவில் மிகப்பெரிதாக இருந்தது. தமிழர்களின் இதயங்கள் ரணப்பட்டன. விடுதலைப் புலிகள் மிகப்பெரிய தவறை செய்துவிட்டார்கள் என்பது போல மக்களிடையே ஒரு மிகப்பெரிய சோர்வு இருந்தது. ஆனால் ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்னர் விடுதலைப் புலிகள் எந்தளவுக்கு தமிழக மக்களால் ஆராதிக்கப்பட்டார்களோ அதனைவிடக் கூடுதலான அளவுக்கு தற்போது ஆதரவு பெருகியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் இன்னல்கள் துடைக்கப்படவேண்டும் என்ற உணர்வு தமிழக மக்களிடையே இன்று என்றுமில்லாதளவுக்கு உருவெடுத்திருக்கிறது.

தமிழகத்தில் ஆறு கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் எனில் அவர்களின் 12 கோடி கரங்களும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு தயாராக இருக்கின்றது என்பதுதான் வரலாற்று உண்மை.

**ராஜீவ் காந்தி படுகொலையை சுற்றியே இலங்கை தொடர்பான இந்திய காங்கிரஸ் அரசின் வெளியுறவுக் கொள்கை பின்னப்பட்டிருக்கிறது. இதை எந்த வகையில் நீங்கள் பார்க்கிறீர்கள்?**

காங்கிரஸ் அரசின் தலைமையில் இன்றுள்ள மத்திய அரசின் கருத்தோட்டமாயினும் வெளியுறவுக் கொள்கை என்றாலும் இனி எந்தக் கட்சி மத்தியிலே ஆட்சி அமைக்கக்கூடிய சூழல் வந்தாலும் வெளியுறவுக் கொள்கை என்று வரும்போது அவர்கள் இந்த அணுகுமுறையைத்தான் பின்பற்றுவார்கள்.

ஏனெனில், பாகிஸ்தான் ஒருபக்கம் பகையோடு இருக்கின்றபோது, வங்கதேசம் இன்னொரு பக்கம் பகையோடு இருக்கின்றபோது, சீனா எந்த நேரத்தில் பகை கொள்ளும் என்ற நிச்சயமற்ற நிலை இருக்கின்றபோது அதன் தெற்குப்பக்கம் இருக்கின்ற இலங்கைத் தீவு தனக்கு பகையாக மாறிவிடக் கூடாது என்ற ஒரு காரணத்திற்காகவே இந்தியா, ராஜபக்ஷ அரசுக்கு பின்னால் நிற்கின்றது என்பதுதான் உண்மை.

எனவே, ராஜீவ் காந்தியின் படுகொலை இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை தீவிரப்படுத்தியிருக்கலாம். ராஜீவ் காந்தி படுகொலை நிகழாமல் இருந்தாலும்கூட ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு மிகப்பெரிய அளவில் முன்வந்து துணை நின்றிருக்கும் என்று நான் நம்பவில்லை. உண்மையில் ஈழத்தமிழர்களுக்கு உதவியவர் இந்திராகாந்தி.

இந்திரா காந்திக்கு இருந்த நம்பிக்கை, இந்திரா காந்திக்கு இருந்த துணிச்சல், இந்திரா காந்திக்கு இருந்த ஈடுபாடு, இந்திரா காந்திக்கு

## தமிழகத்தில் ஈழத்தமிழர் ஆதரவு முன்னரைவிட அதிகமாகியுள்ளது

பின்னால் வந்த எந்த அரசியல் தலைவருக்கும் இல்லை என்பதுதான் உண்மை.

**ராஜபக்ஷ அரசாங்கம் எப்போதும் தமக்கு சார்பாக இருக்குமென்று இந்திய மத்திய அரசு எப்படி நம்புகிறது?**

அதுதான் இந்திய மத்திய அரசு செய்யும் மிக மோசமான தவறு. அதாவது சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையின் பக்கமாக நின்று விடக் கூடாது என்பதற்காக இலங்கை எதைச் செய்தாலும் இந்தியா அதனை கண்மூடித்தனமாக ஆதரிப்பது என்ற நிலையில் இருக்கிறது. பாகிஸ்தானின் பிடியில் இருந்தும் சீனாவின் பிடியில் இருந்தும் இலங்கையை விடுவித்து தனது பக்கமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசு நினைக்கிறது. இது மிக மோசமான கண்ணோட்டம். வெளிவிவகாரத் துறை சார்ந்த மிகப்பெரிய பிழையான முடிபு என்றுதான் நான் கூறுவேன்.

ஏனெனில் இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியாவுக்குத் துணையாகவோ நன்றி உணர்வோடோ இருந்தது கிடையாது.

வங்க தேசத்தை உருவாக்க இந்திரா காந்தி முன்வந்தபோது பாகிஸ்தானின் விமானங்கள் தரித்து நிற்க உதவி செய்ததுதான் இலங்கை என்பதை இன்றைய இந்திய அரசு மறந்துவிட்டது.

பாகிஸ்தான் கொடுக்கும் ஆயுதங்களையும் பயன்படுத்தி, சீனா கொடுக்கும் ஆயுதங்களையும் பயன்படுத்தி, இந்தியா கொடுக்கும் ஆயுதங்களையும் பயன்படுத்தி ஒட்டுமொத்தமாக ஈழத்தமிழர்களைக் கொன்று குவிக்கவேண்டும் என்ற வெறி பிடித்த பாசிச அரசாக இன்று ராஜபக்ஷ அரசு இருக்கிறது. இந்த வெறிபிடித்த ராஜபக்ஷ அரசுக்கு மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ இந்திய மத்தி அரசு துணை நிற்பதை தமிழ் நாட்டிலே இருக்கும் எவரும் விரும்பவில்லை- அங்கீகரிக்கவில்லை - ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் எந்த மத்தி அரசு போர் நிறுத்த ஒப்பந்தத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறதோ அந்த மத்தி அரசே இதுவரை அது குறித்து சிறிதும் கவலைப்படாத நிலையில்-அந்த மத்திய அரசை இயக்குகின்ற, தலைமை தாங்குகின்ற காங்கிரஸோடு எப்படியாவது தன்னுடைய தேர்தல் கூட்டணியை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று துடிக்கிறது - தவிக்கிறது- தவமிருக்கிறது- திராவிட முன்னேற்றக் கழகம்.

எந்த நிலையிலும் ஈழத்தமிழர்களின் நலனைப் புறக்கணித்து விட்டு தமது சுய நலனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற அளவில் காங்கிரஸோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி இறுதி செய்யப்பட்டுவிட்டது. இது ஒரு பக்கம்தான்.

அதேநேரம் உலகத் தமிழர்களின் உரத்துக் குரல் கொடுக்கும் வைகோ சென்னைக்கு பிராணப் முகர்ஜி வந்தபோது கறுப்புக்கொடி காட்டி சிறை சென்று வெளியே வந்திருக்கிறார். உலகத் தமிழர்களுக்காக ஓங்கிக்குரல் கொடுக்கிறார். ஈழத்தமிழர்களுக்காக அவர் மிகப் பெரிய அளவுக்கு போராடுகிறார். விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்காக தான் எந்த விளைவு களையும் சந்திக்கத்தயார் என்று கூறுகிறார். அவரது தமிழின உணர்வு குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் அதேநேரத்தில் முழுக்க முழுக்க தமிழின உணர்வு அற்றவராகவும் தமிழினத்திற்கு விரோதியாகவும் ஈழத்தமிழர்களை அழித்தொழிப்பதில் ராஜபக்ஷ அரசுக்கு தார்மீக அடிப்படையில் ஆதரவு கொடுப்பவராகவும் இருக்கின்ற ஜெயலலிதாவின் பக்கமாகப்போய் நின்று குறைந்தது ஐந்து நாடாளுமன்ற தொகுதிகளைப் பெற்று அதில் மூன்று அல்லது நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கி மத்தி அரசுக்கு அனுப்பவேண்டும் என்பதற்காக வைகோ மேற்கொள்ளும் அரசியல் சமரசம் இருக்கிறதே அது மிகவும் பரிதாபகரமானது, வருந்தத்தக்கது.

பாட்டாளி மக்கள் கட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். மருத்துவர் இராமதாஸ் காலையில் இருந்து மாலைவரை ஈழத் தமிழர்களுக்காக கண்ணீர் வடிக்கிறார் - குரல் கொடுக்கிறார். ஆனால் இன்றைக்கும் அவரது பிள்ளை மத்திய அரசில் தான் இடம்பெற்றிருக்கிறார். காங்கிரசிலிருந்து அவர் வெளியே வரவில்லை. அவரின் கட்சி மீண்டும் காங்கிரஸோடும் திராவிட முன்னேற்றக் கழகத்தோடும் கூட்டணி அமைக்க மறைமுகமாகப் பேச்சு நடத்திக் கொண்டுதான் இருக்கிறது.

விடுதலைச் சிறுத்தைகள் அணி திருமாவளவன் தலைமையில் இயங்குகிறது. பிரபாகரனை 1980 தொடங்கி நான் நேசிப்பவன், பிரபாகரனின் அன்புக்குரியன் என்று சொல்கின்ற திருமாவளவன் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி தொடரும் என்று தொலைக் காட்சியில் பேட்டி கொடுத்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி என்றால் யாருடன் கூட்டணி? காங்கிரஸுடன் சேர்ந்துதானே கூட்டணி. திருமாவளவனை சிறைக்குள் தள்ள வேண்டுமென காங்கிரஸ் கூறுகிறது. தேசப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டும் என்று கூறுகிறது.

எனினும் அவரை கைது செய்யாமல் விடுதலைச் சிறுத்தைகளின் வாக்குகளும் இருந்தால்தான் தேர்தல் நேரத்தில் தனக்கு பலம் கிடைக்கும் என்று கருணாநிதி நம்புகிறார். எனவே ஒரு பக்கத்தில் விடுதலைச்சிறுத்தைகளுக்கும் இன்னொரு பக்கத்தில் சோனியா காந்திக்கும் பாலமாக கருணாநிதி இருக்கிறார்.

ஒரு நாடாளுமன்றத் தொகுதியை பெற்று அதில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆகவேண்டும் என்பதற்காக சோனியா காந்தியின் உறவை திருமாவளவனால் ஏற்றுக் கொள்ள முடிகிறது எனில் தமிழ் நாட்டில் நெடுமாறன் என்கிற ஒரு மனிதனைத் தவிர ஈழத்தமிழர்களுக்காக, புலம் பெயர்ந்த தமிழர்களுக்காக உண்மையான உணர்வோடு பாடுபடுகிற ஒரு தலைவர் இந்த தமிழ் நாட்டில் இல்லை என்பதை நான் மீண்டும் மீண்டும் கூறிவைக்கிறேன்.

காரணம் நெடுமாறனுக்கு அரசியல் நிர்ப்பந்தம் இல்லை. அரசியல் கடந்து நிற்கக்கூடிய அத்தனை பேரும் ஈழத் தமிழர்களுக்காக உண்மையாகப் போராடு கிறார்கள். ஆனால் அரசியல் அரங்கத் திற்குள்ளே இருக்கும் அத்தனை அரசியல் தலைவர்களும் ஈழத்தமிழர்களை வைத்துக் கொண்டு தங்களது அரசியல் நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நம்மை ரணப்படுத்தும் கசப்பான உண்மை. (ந-5)

## நடேசர் அபிஷேகம்

யாழ். இந்து சமயப் பேரவையில் அமைந்துள்ள ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் நடேசர் அபிஷேகம் நடைபெற்று விசேட பூஜை, வழிபாடுகள் இடம்பெறும். நாளை மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 8.00மணிமுதல் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் போன்ற நிகழ்வுகளை அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்தவுள்ளனர். (ஓ)

## இலங்கைக்கு 2 பில்லியன் நிதி

இலங்கையின் நிதிநெருக்கடியை குறைப்பதற்கு ஏதுவாக 2 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு உலக நிதி அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

உலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட நாடு களுக்கு உலக நிதி அமைப்பு உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இலங்கைக்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அது இணக்கம் தெரிவித்துள்ளது என்றார். (ந-5)

## பாதுகாப்புப் பிரதேசங்களில் அடிப்படை வசதியில்லை

(கொழும்பு) —

வன்னியில் மோதல்கள் தொடர்ந்து வரும் நிலையில் பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப்படுத்தப்படும் பகுதிகளில் போதுமானளவு அடிப்படை வசதிகள் இல்லையெனவும் அங்கு மக்கள் நெரிசல் அதிகரித்திருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அங்குள்ள மக்கள் போதியளவு உணவின்றி கொல்லப்படுவது குறித்துத் தமக்குத்

### ஐ.நா.தெரிவிப்பு

தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வன்னியிலிருந்து வெளியேறிய மக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் மலேரியா, டெங்கு, சின்ன முத்து போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்களின் இணைப்பகம் தெரிவித்துள்ளது. (ந-5)

## கலந்துரையாடல்

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் துன்னாலையில் மது போதைவஸ்தும் சமூக அபிவிருத்தியும் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. துன்னாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் காலை 9மணிக்கும், துன்னாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கரவெட்டி பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-10)

பெறுவகை முகாமைத்துவம்
PROCUREMENT MANAGEMENT
கேள்வி நடைமுறைகள் பற்றிய இந்நூல் அரச உத்தியோகத்தர்களின் வினைத்திறமைகாண் தடை, போட்டிப் பரீட்சைகளுக்காக வினாவிடை வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூபாய் 180.00. தபாலில் பெற விரும்புவோர் யாழ்ப்பாண தபால் நிலையத்தில் மாற்றக்கூடிய ரூபாய் 250.00 பெறுமதியான காசுக்கட்டளையினை அனுப்பி பெறலாம். தொடர்புகளுக்கு:
ஜே.கில்பேட்குணம், 41/60, ஆஸ்பத்திரி முன் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர்.
T.P.0214591460
(2385)

## இரத்த தான முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கி மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஆனைக்கோட்டை சொண்ட் நிறுவன அலுவலகத்தில் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இரத்ததானம் வழங்க விரும்பும் இருபாலரும் கலந்து இரத்த தானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு இரத்த வங்கி வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-6)

## கருத்தரங்கும் கருத்தாடலும்

நல்லூர் கோவில் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் பூரணை நாள்களில் இடம்பெற்றுவரும் 'பெரிய புராணம் காட்டும் வாழ்வியல்' என்ற பொருளிலான கருத்தரங்கு, கருத்தாடற் தொடரில் நாளை மறு நாள் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு கலாநிதி மனோன்மணி சண்முகநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதில் காரைக்கால் அம்மையார் புராணத்தின் கூட்டமைப்பு என்ற தலைப்பில் கோப்பாய் தெற்கு றோ.க. வித்தியாலய அதிபர் ச. லலீசனும் 'காரைக்கால் அம்மையார்புராணத்தின்வெண்மை' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி பவனேசனும் கருத்துரைகளை ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து இடம்பெறவுள்ள கருத்தாடல் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் செல்வஅம்பிகை நடராஜா, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் கேதீஸ்வரி ஆனந்தரட்ணம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்க சிவம் ஆகியோர் இணைப்பாளராகச் செயற்படுவர். (ஓ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 60 | 70 |
| தக்காளி | 60 | 70 |
| அவரை | 20 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | -- |
| கோவா | 25 | 40 |
| கரட் | 60 | 70 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 20 | 40 |
| வாழைக்காய் | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 25-30 | 30-40 |
| பெரிய வெங்காயம் | 40 | 50-60 |
| பாகற்காய் | 40 | 50 |
| வெண்டிக்காய் | 25 | 50 |
| கரணைக் கிழங்கு | 25 | 40 |
| பயிற்றங்காய் | 50 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 |
| போஞ்சி | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 120 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30-35 |

## சட்ட விரோத மதுபானம் வைத்திருந்த நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த நால்வர் யாழ். மது வரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு கடந்த வியாழக்கிழமை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர். வசந்தசேனன் சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தலா 22 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-6-7)

## கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடை பெற்ற 2008 ஆம் ஆண்டுக்கான கலாபூ ஷண விருது வழங்கும் நிகழ்வில் பங்குபற்றாதோருக்கான விருதுகள் இந்துசமய கலாசார அலு வல்கள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டுள்ளது.

இவ் விருதுகள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசாமி அறிவித்துள்ளார்.

கதிர்காமு தம்பையா (புலோலி தெற்கு), நாகலிங்கம் புவனசுந்தரம் (வட்டுக்கோட்டை), சரோஜா தம்பு (நெல்லியடி), தம்பிப் பிள்ளை யோகநாதன் (சங்கானை), செல்லையா சிவசாமி (நல்லூர்) ஆகியோருக்கான விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. (ச)

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தி[illegible]னால், இளவாலை வடக்கு இலவச தொழிற்ப[illegible]யிற்சி நிலையத்தில் அலங்கரிக்கப்பட்ட சேலை[illegible]கள், தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்ப[illegible]னையும் நாளையும் நாளை மறுதினமும் மு.ப 10.30 மணிக்கு தெல்லிப் பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரித்தாஸ் கியூடெக் நிறுவன வாழ்வாதார திட்ட முகாமையாளர் ந. தவராஜகுமார் தலைமையில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ். முரளிதரன், சிறப்பு விருந்தினராக கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் கி.யோ. ஜெயக்குமார், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. ரதி நகுலேஸ்வரன், யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் அ. சக்திவேல், கரித்தாஸ் - கியூடெக் இணைப்பாளர் செல்வி. என். பத்மசேகரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-2)

## வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு வடமராட்சி உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-19)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் பட்ட மேற் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பிராந்திய இணைப்பாளர் கி. கந்தவேள் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## மக்கள் வங்கியின் வனிதா வாசனா மாதம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் வனிதா வாசனா மாதத்தை முன்னிட்டு மார்ச் 8 முதல் ஏப்ரல் 8 வரை சகல மக்கள் வங்கி கிளைகளிலும் 'வனிதா வாசனா இசுறும் பத்' ஒன்றை பெற்றுக் கொள்வோருக்கு சேமிப்புக்கள் இரட்டிப்பாக்கப்படவுள்ளது. (ஓ-6)

## வாரம் ஒரு தகவல்

## இளமை இதோ!

"தாத்தா, உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இளமை திரும்ப வேண்டும்! அதற்கு ஏதாவது மருந்து உங்களது கடையில் இருக்கிறதா?"

"அதற்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்களாம் தாத்தா"

"அப்படியா? அது என்ன மருந்து?"

"கற்றாழையிலிருந்து தான் அந்த மருந்தை உருவாக்கியிருக்கிறார்கள்"

"ஏற்கனவே காய்ச்சலைக் கட்டுப்படுத்த கற்றாழைச் சாறு கொடுப்பது வழக்கம்"

"ஆமாம் தாத்தா. அதேபோல் அல்சரையும் குணப்படுத்தும். கற்றாழையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் வருவதில்லையாம். கொலஸ்ரோலும் இருப்பதில்லையாம். அதனால் இப்பொழுதெல்லாம் 'கற்றாழை டொனிக்' கே கடைகளுக்கு வந்துவிட்டது."

"அதைச் சாப்பிட்டால் நல்லது என்கிறாயா?"

"முதலில் எலிகளுக்கு இதைக் கொடுத்துத்தான் சோதனை செய்து பார்த்தார்களாம். அவற்றுக்கெல்லாம் இளமை தள்ளிப் போகிறது என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்."

"அப்படியா!"

"இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் ' கற்றாளை சாலட்' கிடைக்கிறதாம்.'

"நல்ல செய்தி கூறினாய் தம்பி அது இருக்கட்டும். இப்பொழுது ரெடிமெட்டா உன்னிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?"

"இந்த வயதில் இப்படி ஒரு ஆசை தேவையா தாத்தா உங்களுக்கு?"

"இது எனக்கில்லையப்பா. என்னுடைய அப்பாவுக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

08.03.2009
(மாசி 24, ஞாயிற்றுக்கிழமை)
துவாதசி பிற்பகல் 1.47 மணிவரை
பூசம் முற்பகல் 11.37 மணிவரை
இராகுகாலம் 4.54-6.24 மணிவரை
சுபநேரம் 9.24-10.54 மணிவரை
**ஊரெழுப் பிள்ளையார் தேர், இரண்டாம் தவக்கால ஞாயிறு பிரதோஷ விரதம்**

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், சுப செலவு, பெரியோர் ஆதரவு. |
| இடபம் | இனிய சம்பவம், காரிய நன்மை, தனவருவாய், வாக்கு மேன்மை. |
| மிதுனம் | வேலைச் சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், விவாதம், மாதர் நட்பு. |
| கடகம் | தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, ஜனவசியம், உறவினர் வருகை. |
| சிங்கம் | சயன சுகக் குறைவு, உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம், தனவிரயம். |
| கன்னி | பாராட்டு, காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, மனமகிழ்ச்சி. |
| துலாம் | பிறர் உதவி, சுப நிகழ்வு, உற்சாகம், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, சரீரப் பிரயாசை, வீண்பயம், பிரயாணம். |
| தனுசு | மரியாதைக்குறைவு, அச்சமான நிலை, முயற்சி தடங்கல், போசன சுகம். |
| மகரம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பண வருவாய், காரிய அனுகூலம். |
| கும்பம் | தேக நலன், சத்துரு ஜெயம், காரிய சித்தி, தனலாபம். |
| மீனம் | காரிய இடையூறு, பணக்குறைவு, வியாபார விருத்தி, வீண்பகை. |

வளவன்

## காத்திரு

பார்த்துப் போன
பார்வைகள்
பக்கம் வரவில்லை
காற்றுப் போன
தேசத்தில்
கைகள் எழவில்லை
நேற்றுப்போல்
இன்றும் விடியவில்லை
ஆனால்
இன்று போல் நாளை
இருளில் இல்லை
மாற்றம் என்பது நேரும்
ஏற்றம் வாழ்வில் மீளும்
மௌனம்
ஏதற்கு மனமே
கனிவாய் பாத்திரு
தினமே
திடமாய் காத்திரு
உறவே
கனவாய் போகாது
உணர்வாய்!

த. தர்பாகரன், மானிப்பாய்.

# தனது வெற்றிக்கு அனுமானை வணங்கிய ஜனாதிபதி ஒபாமா



அமெரிக்க ஜனநாயகக் குடியரசின் 47 ஆவது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள பராக் ஒபாமா அனுமான் பக்தர் ஆவார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நின்ற போது ஒபாமா, பிரசாரக் கூட்டங்களிற்குச் செல்லும்போது அனுமானின் சிலையைக் கொண்டு சென்றதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

அத்துடன் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று



வெள்ளைமாளிகைக்குள் செல்லும் போதும் பராக் ஒபாமா அனுமானின் அருளை வேண்டிச் சென்றதாகவும் அமெரிக்கப் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கையில் தாயத்து அணிந்துகொள்ளுதல், கழுத்தில் உருத்ராட்சக மாலை அணிதல், விரல்களில் குறிப்பிட்ட கற்களாலான மோதிரங்கள் அணிதல் ஆகியவை தங்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துத அதிர்ஷ்டத்தைத் தரும் என்பதில் இந்துக்களுக்குப் பழங்காலந்தொட்டே ஆழந்த நம்பிக்கையுண்டு. இப்போது கூட வியாபாரத்தில் இலாபம், கல்வியில் வெற்றி, பணவரவு, பிரச்சினைகளுக்குத் தீர்வு ஆகியவற்றுக்காக சோதிடர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் சிபாரிசு செய்யும் முத்து, பவளம் ஆகியவை பதித்த மோதிரங்களை நம்பிக்கையுடன் அணிந்துகெள்ளும் பலரைக் காணமுடியும்.

இவை எதுவும் பயன்படுத்தாமல் நம்பில் பெரும்பாலானோர் தங்களுடைய இஷ்ட தெய்வத்தின் படங்களைப் பையில் எடுத்துச் செல்வதுமுண்டு.

ஆனால், இந்த நம்பிக்கை மற்ற நாடுகளிலும் உண்டு என்று அறியும் போது வியப்பு உண்டாகிறது.

அத்துடன் விஷ்ணுவின் உருவத்துடனான பதக்கமுடைய வெள்ளிமாலை, கருடனின் பொம்மை, விஷ்ணு சிலை என்பனவற்றையும் தமது பையில் செல்லும் இடமெல்லாம் எடுத்துச் சென்றுள்ளார் ஜனாதிபதி பராக் ஒபாமா.

ஒபாமாவின் பெற்றோர் முன்னாளில் இந்தோனேஷியாவில் இருந்தவர்கள். அங்கு இந்துக்கள் உள்ளனர்.

இராமாயண கதாபாத்திரங்கள் அங்கு பிரபலம்.

அதனால் ஒபாமா அனுமான் பத்தராக மாறியிருக்கலாம் என அமெரிக்கப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

அதுமட்டுமல்லாமல் புதுடில்லியிலுள்ள அனுமான் கோவிலில் பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென வழிபட்ட பிராமணர்கள், அனுமான் ஐம்பொன் சிலை ஒன்றையும் ஒபாமாவுக்கு அனுப்பி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# லஷ்கர் –இ–தொய்பா பயங்கரவாதிகளுடன் பாகிஸ்தான் அரசுக்கு தொடர்புள்ளது

## அமெ.முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி தெரிவிப்பு

பாகிஸ்தான் அரசுகள் லஷ்கர்–இ–தொய்பா பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளதை மறுக்க முடியாது என்று அமெரிக்க முன் னாள் புலனாய்வுத்துறை அதிகாரி போல் ஆர். பில்லர் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது ,

பயங்கரவாதத்தை தங்கள் நாட்டில் இருந்து ஒழிப்பது என்ற பிரச்சினையில் பாகிஸ்தான் அமெரிக்காவிடம் தொடர்ந்து நாடகமாடி வருகிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற கொள்கையிலும் பாகிஸ்தான் ஒத்துவருவதில்லை. காஷ்மீரில் எல்லை தாண்டி பயங்கரவாதத்தை தூண்டிவிடும் வேலையை பாகிஸ்தானில் இருக்கும் லஷ்கர் – இ–தொய்பா பயங்கரவாதிகள் பல ஆண்டுகளாக மேற் கொண்டு வருகின்றனர். இதற்காகவே பாகிஸ் தான் அரசு அவர்களைப் பயன்படுத்தி வருகிறது.

பிறநாடுகள் நெருக்கடி கொடுக்கும் போது சில நேரங்களில் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுபோல பாசாங்கு செய்கிறது. ஆனால் பாகிஸ்தான் அரசு உண்மையில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதனை அறிந்துள்ள அமெரிக்கா, பாகிஸ்தான் மீது மிகுந்த அதிருப்தியில் உள்ளது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் உலக பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றனர் என்று போல் கூறியுள்ளார். (ஓ–6)

# ஐ.நா.மனித உரிமை சபையில் அறிக்கை சமர்ப்பிப்பு

சுவிற்சர்லாந்து ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையின் பத்தாவது கூட்டத் தொடரில் பிரான்ஸை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமை மையத்தினால் அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் பல ஆய்வுக்கட்டுரைகள், அனைத்துலகத்தின் பார்வை, ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தற்போது தமிழீழ மக்களினால் எதிர்கொள்ளப் படும் மிக மோசமான இராணுவ அடக்குமுறைகள், மனிதாபிமான அவலங்கள் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. • (ஓ–6)

# விமானம்விழுந்து நொறுங்கியதில் 3 விமானிகள் உடல் கருகிப் பலி!

பெங்களூர் அருகே, ‘சரஸ்’ ரக குட்டி பயணிகள் விமானம் ஒன்று பரிசோதனை பயணத்தின் போது தரையில் விழுந்து நொறுங்கியது. அதில் இருந்த 3 விமானிகள் உடல் கருகிப் பலியானார்கள்.


பெங்களூரில் உள்ள இந்தியஅரசுக்கு சொந்தமான என்.ஏ.எல்.என்ற நிறுவனம் ‘சரஸ்’ என்ற இலகு ரக சிறிய பயணிகள் விமானத்தை தயாரித்துள்ளது.

முழுமையாக தயாரிக்கபட்ட விமானத்தை விமானிகள் அவ்வப்போது ஓட்டிச்சென்று பரிசோதனை செய்து வருகிறார்கள். நேற்றுமுன்தினம் பிற்பகல் ‘சரஸ்’ விமானம் ஒன்று பரிசோதனை பயணத்தில் ஈடுபட்டிருந்தது. அதில் விங் கொமாண்டர்கள் பிரவீண், ஷா மற்றும் இளைய ராஜா ஆகிய 3 விமானிகள் இருந்தனர். பெங்களூரில் எச்.எ.எல்.நிறுவனத்திற்குச் சொந்தமான விமானத் தளத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற அந்த விமானம், 40கிலோ மீற்றர் தொலைவில் பறந்தது.

பிற்பகல் 3.40 மணி அளவில் அந்த விமானம் திடீர் என்று விமானியின் கட்டுப்பாட்டை இழந்த தரையை நோக்கி வேகமாக வந்தது. விமானத்தில் ஏற்பட்ட கோளாறை உணர்ந்து கொண்ட விமானிகள், பரசூட் மூலம் குதித்து உயிர் தப்ப முயற்சி செய்தனர். ஆனால், கண் இமைக்கும் நேரத்தில் அந்த விமானம் தரையில் விழுந்து சுக்குநூறாக நொறுங்கியது. இந்தப் பயங்கர விபத்தில் விமானத்தில் இருந்த 3 விமானிகளும் உடல் கருகிப் பரிதாபமாக இறந்தனர். இவ் விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ஓ–6)

# கோழி முட்டைக்குள் பல்லி

சுப்பர் மார்க்கெட் சென்ற ஜதர் ஒரு ஜாம் போத்தல் வாங்கி அதை கவுண்டரில் கொடுத்தான். பிறகு பணம் செலுத்திவிட்டு பார்சலுடன் வீட்டுக்குச் சென்ற ஜதர் அதற்குள் ஜாமுக்குப் பதிலாக ஊறுகாய் போத்தல் இருந்ததைக் கண்டு எரிச்சல் அடைந்து, அதையெடுத்துக் கொண்டு சுப்பர்மார்க்கெட் சென்று வாதிட்டான்.



ஆனால், அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் அருகேயுள்ள டார்வின் நகரில் இருக்கும் டாக்டர் பீற்றர்பீமௌண்ட்டின் நிலைமையைப் பற்றித் தெரியுமா? இரவு உணவுக்காக அவர் ஒருபச்சை முட்டையை உடைத்தபோது, அதிலிருந்து ஒரு பல்லி விழுந்தது. இதை அவர் யாரிடம் போய் புகார் செய்வார்? முட்டையை ஈன்ற பெட்டைக் கோழியிடம் சென்றுதான் கேட்க வேண்டும். அந்தக் கோழிக்கே பாவம் இது எப்படி ஏற்பட்டது என்று தெரிந்திருக்காது.

விஷயத்தை அவுஸ்திரேலிய முட்டைக் குழுவிடம் டாக்டர் பீற்றர் தெரிவித்ததும் அவர்கள் அதை விஞ்ஞானிகளிடம் காட்டினார். அவர்களுக்கும் முதலில் ஒன்றும் புரியவில்லை.

பின்னர் ஒருவாறு ஊகித்தனர். நிச்சயமாக, அந்தப் பல்லி சீரண உறுப் புகளின் வழியே வந்து முட்டைக்குள் சிக்கியிருக்காது. கோழி பல்லியை உண்டிருந்தால் அது சீரணமாகியிருக்கலாம். அல்லது பல்லியின் நஞ்சினால் கோழி இறந்திருக்கலாம். அதனால், கோழியின் பின் பக்கம் வழியாக நுழைந்து கருவறைக் குழாயில் சிக்கியிருக்கலாம் அதைச் சுற்றி முட்டையும் உருவாகியிருக்கலாம் என்று ஊகித்தனர். ஆக, முட்டையைக் கூடப் பார்த்து உண்ணவேண்டும். அதில்கூட கலப்படம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. (ஓ–5)



யாவரும் நலம் படக் கதைப்படி தன் குடும்பமே விரும்பிப் பார்க்கும் யாவரும் நலம் என்ற சின்னத்திரைதொடர்ஒன்றில்வரும்விபரீதநிகழ்வுகள்தன்வீட்டிலும் தொடர்ந்து நிகழ்வதாக ஹீரோ உணர்கிறார். இதையடுத்து தானும் அத்தொடரை தொடர்ந்து பார்க்கத் தொடங்குகிறார். அடுத்தடுத்து நாட்கள் தொடரில் நிகழும் நிகழ்வுகள் தன் வீட்டில் நிகழாமல் தடுக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்குகிறார். கூடவே அத்தொடர் தன் வீட்டில் மட்டும்தான் அப்படி திகில் தொடராக ஒளிபரப்பாகி வருகிறது. என்பதையும் பிற இடங்களில் அதே யாவரும் நலம் எனும் பெயரில் நடிகை குஷ்பு தொகுத்து வழங்கும் ஒரு உடல் நலம் சம்பந்தப்பட்ட லைவ் புரோ கிராமாக ஒளிபரப்பி வருவதையும் கண்டுபிடித்து அதிரும் ஹீரோ, அதற்கு காரணம் என்ன? என்பதை தன் பொலிஸ் நண்பர் உதவியுடன் கண்டுபிடித்து காரணமானவரை போட்டுத் தள்ளி தன் வீட்டில் உள்ளவர்களை காபந்து செய்வதே யாவரும் நலம் படத்தின் கதை!



திரை விமர்சனம்

இதை எவ்வளவு திகிலாகவும் த்ரில்லாகவும் சொல்ல முடியுமோ... அவ்வளவுக்கு அவ்வளவு அழகாகவும் அசத்தலாகவும் சொல்லி சபாஷ் போட வைத்திருக்கின்றனர். தன் முன் பரவிக் கிடக்கும் அமானுஷ்ய சக்தியை அறிந்துகொள்ளும் ஹீரோவாக மாதவன் பிரமாதப்படுத்தியிருக்கிறார். ஒரே சமயத்தில் ஓராயிரம் உணர்ச்சிகளை முகத்தில் காட்டி காண்போரை கவர்ந்திழுக்க மாதவனால் மட்டுமே முடியும்! என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறார் மாதவன். மாதவன் மாதிரியே அவரது மனைவியாக வரும் ஹீரோயின் நீது சந்திரா, மாதவனின் தாயார் சரண்யா, அண்ணன் ஹரி நாயர், அண்ணன் மனைவி அமீதா, தங்கை மதுரா அவர்கள் வீட்டு நண்டு சிண்டுகள், டாக்டர் கம் வில்லனாக வரும் சச்சின் கடேகர், குருட்டு மனிதர் சட்டர்ஜி, எஸ்.ஐ. ரவிபாபு, வக்கீலாக வரும் சம்பத், குருட்டு மனிதனின் செல்லப்பிராணி என எல்லோரும் தங்கள் பங்கை சரியாகச் செய்து சபாஷ் பெறுவது யாவரும் நலம் படத்தின் பெரிய ப்ளஸ்.




யாவரும் நலம்: அனைவருக்கும் நலம்...!

# யாவரும் நலம்

படம் பார்க்கும் ரசிகர்களை ஒவ்வொரு பிரேமிலும் மிரட்ட வேண்டும் எனத் திட்டமிட்டு ஒரு திகில் படத்தை இன்ச் பை இன்ச்சாக செதுக்கி திகிலூட்டியிருக்கிறார் இயக்குனர் விக்ரம் கே.குமார். அவருக்கு ஒளிப்பதிவு மூலம் பி.சி ஸ்ரீராமும் இசை மூலம் சங்கர் ஈஸ்னன் லாயும் பின்னணி இசை மூலம் டுப்பி -பாரியும் படத்தொகுப்பு மூலம் ஸ்ரீதர் பிரசாந்தும் வசனம் மூலம் நீலு அய்யப்பனும் பக்கபலமாக இருந்து அடுத்து என்ன? அடுத்து என்ன ? எனப் படம் முழுக்க பார்க்கும் ரசிகர்களுக்கு ஆவலைத் தூண்டி விட்டு வசூலை அள்ளிக்கொள்ள முயன்றுள்ளனர். மாதவனுக்கு தெரியும் அமானுஷ்ய விஷயங்கள். அத்தொடரை முழு மூச்சாக பார்க்கும் அந்த வீட்டுப் பெண்களுக்குத் தெரியாமல் போவது எப்படி? என்பது போன்ற ஒரு சில லொஜிக் மிஸ்டேக்களை தவிர்த்து விட்டுப் பார்த்தால் யாவரும் நலம் எல்லோரும் விரும்பும் நல்ல திகில் படம்.

# ஸ்ரீதேவிக்கு டும் டும்




நட்சத்திர ஜோடி விஜயகுமார்- மஞ்சுளா தம்பதியின் மகள் ஸ்ரீதேவி. இவர் ரிக்சா மாமா, டேவிட் அங்கிள், தெய்வக் குழந்தை படங்களில் குழந்தை நட்சத்திரமாகவும், காதல் வைரஸ், பிரியமான தோழி, தித்திக்குதே, தேவதை யைக் கண்டேன் படங்களில் கதாநாயகியாகவும் நடித்துள் ளார்.

ஸ்ரீதேவிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. மணமகன் பெயர் ராகுல், ஐதராபாத்தில் சொந்தமாக சொப்ட்வெயர் கம்பனி வைத்துள்ளார்.

ஸ்ரீதேவி-ராகுல் திருமணம் நிச்சயதார்த்தம் எதிர் வருகிற 15 ஆம் திகதி நடக்கிறது.

முகூர்த்தம் ஜூன் 18ஆம் திகதி நடைபெற வுள்ளது.

# ரஜனியின் டப்பிங் படம் எங்கள் அரசன்




இந்தியில் ரஜினிகாந்த் நடித்தபடம் கூன் கா கர்ஷ். இந்தப்படத்தில் ரஜினியுடன் வினோத் கன்னா, சஞ்சய் தத் ஆகியோரும் நடித்திருந்தனர். மூன்று பேருக்கும் ஆளுக்காரு ஜோடியாக டிம்பிள் கபாடியா, சரிகா, சங்கீதா ஜ்லானி ஆகியேர் நடித்திருந்தனர்.

தற்போது இந்த படம் எங்கள் அரசன் என்ற பெயரில் டப்பிங் செய்து, டிஜிட்டல் தொழில்நுட்பம் செய்யப்பட்டு தமிழில் வளிவருகிறது.

மூன்று மணிநேரம் ஓடக்கூடிய இந்தப் படத்தில் ரஜனி ஒரு மணிநேரம் மட்டும் வருகிறார்.

ஆனாலும் கலர்ஃபுல்லான 3 பாடல்களும், லக்கலான 3 ஃபைட்டுகளும் ரஜினிக்கு உண்டு. ஆர்.கே. லிம்ஸ் மற்றும் ஐ கேபிடல் நிறுவனாங்கள் எங்கள் அரசனை வளியிடுகின்றனர்.

# பிலிம் இல்லாமல் படம் எடுக்கும் கமரா



ஒஸ்கார் விருதுகளை அள்ளிய ஸ்லம்டேக் மில்லியனர் படத்தை எடுத்த கமரா தமிழுக்கு வருகிறது. நவீன தொழில் நுட்பத்துடன் இருக்கும் இந்த கமராவை வைத்து ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்த் தமிழில் படம் எடுக்க விருக்கிறார்.

பிலிம் இல்லாமல் "படம் காட்டுறான் பாருடா" என்று நகைச் சுவைக்காக சொல்வார்கள் அப் படி பிலிம் இல்லாமல் படம் எடுக்க முடியும் என சொல்ல வந்திருக்கிறது புதிய கமரா. அதற்கு பெயர் சிலிகான் இமேஜின். இந்த கமராவுக்கு பிலிம் தேவையில்லை.


ஹார்ட் டிஸ்க்ஸ் படம் பதிவாகிக்கொள்ளும். ஒரு ஹார்ட் டிஸ்க் ல் நான்கு மணி நேரம் அதாவது 160 ஜி.பி. பதிவுகளை சேமித்துக் கொள்ளலாம். பிலிம் செலவு மிச்சம் .அதே நேரம் பிலிம் அளவுக்கு தெளிவு இருக்கும் காட்சிகளை ஸ்பொட்டில் பார்த்துக்கொள்ள சின்ன மொனிட்டரும் கமராவில் பொருத்தப் பட்டிருக்கும். கையில் வைத்துக்கொண்டு படம் பிடிக்கும் அளவுக்குத்தான் கமராவில் எடை உள்ளது.சினிமா கமராவுக்குத் தேவையான லைட்டிங்கே இந்த கமராவுக்கும் போதுமானதாகும்.

தமிழ்சினிமாவுக்காக இரண்டு சிலிகான் இமேஜின் கமராக்களை ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்த் வரவழைத்திருக்கிறார். புதிதாக வந்திருக்கும் இந்த கமராக்களை ஒளிப்பதிவாளர் சங்க தலைவர் பி.என் சுந்தரம், செயலாளர் ஜி.சிவா மற்றும் கே.எஸ்.செல்வராஜ் உள்ளிட்டோர் பார்வையிட்டனர் இதனைத் தொடர்ந்து விரைவில் மேலும் சில ஒளிப்பதிவாளர்களும் இந்த ரக கமராக்களை வாங்க திட்டமிட்டிருக்கிறார்களாம்.


# ஆறுபடை

அனாதை ஆசிரமம்,சிறுவர் காப்பகம் பேன்றவற்றை நடத்தி சமூகசேவை செய்வதாகக் காட்டிக் கொள்ளும் ஊர் பெரிய மனிதர் அங்கு வளரும் சிறுமிகளைக் கற்பழித்து, கொடூர கொலைகளையும் செய்கிறார். அவர்தான் அப்படியென்றால்... அவரது ஒரே வாரிசான மகனும் மொடலிங் ஸ்டுடியோ நடத்துவதாகக் கூறிக்கொண்டு,அங்கு வரும் பெண்களை அவர்களுக்கே தெரியாமல் நிர்வாணப் படம் எடுத்து, அவர்களிடம் அத்துமீறுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்.

அந்த அனாதை ஆச்சிரமத்தில் வளர்ந்த ஆண்கள் சிலர் இந்த உண்மைகளைக் கண்டுபிடித்து அப்பனை பழிவாங்கப் பிள்ளையை போட்டுத் தள்ள களம் இறங்குகின்றனர். ஆனால் அவர்களது எண்ணத்தில் மண் அள்ளிப்போட்டு பெரிய மனிதரின் பிள்ளையை காபந்து செய்யும் ஆறுபடை பட நாயர் குருவே ஒரு கட்டத்தில் பெரிய மனிதரின் வாரிசை போட்டுத் தள்ளுகிறார். அது ஏன்? என்பதும், பெரிய மனிதர் குருவை பழி தீர்த்தாரா ? என்பதும் ஆறுபடையின் சுவாரஸ்யமான க்ளைமாக்ஸ்!



ஆறுபடை: சினிமாவின் புறநானூற்று அகநானூற்று காலத்து பழைய படை




நாயகன் குருவாக புதுமுகம் குருவே நடிக்கிறார். பழகிய முகம் இல்லை என்றாலும் நடிக்கத் தெரிந்த புதுமுகம்! புதுமுக நாயகி ஆஷாவும் அழகாக நடித்திருக்கிறார்.மலேசியா நடிகை சாரா , ஒரு பாட்டுக்கு குத்து டான்ஸ் போட்டிருக்கும் வாள மீனு மாளவிகா, லகஷா என நடிகைகள் அனைவரும் கவனத்தை கவருகிறார்கள்.

ஆனால்,பொலிஸ் அதிகாரியாக வரும் தென்னவனைத் தவிர கஞ்சா கருப்பு. மயில்சாமி, முத்துக்காளை, பெஞ்சமின்,கொட்டாச்சி உள்ளிட்ட நடிகர்கள் அனைவரும் காமெடி எனும் போர்வையில் கடித்து ... குதறி... கோபப்படுத்துகின்றார்கள்.

குரு-ஆஷா ஜோடியின் காதல் காட்சிகளும், ஊர் பெரிய மனிதர் மற்றும் அவரது வாரிசின் வில்லத் தனங்களும் பல படங்களில் பார்த்துப் பார்த்து சலித்துப் போன காட்சிகள் என்பதால் சுத்த போர். அவற்றை எடிட்டர் சுரேஷ்ராஜன் நினைத்திருந்தால் தவிர்த்திருக்கலாம். புதியவர் ஆழ்வார் ஸ்ரீயின் இசையில் பாடல்கள் இனிமை! பின்னணி இசை பழமை! வில்லாளனின் ஒளிப்பதிவில் வித்தியாசமாக எதுவுமில்லை.

கே.பி.சர்வதேச தீர்த்தவனின் கதை, திரைக்கதை, வசனம்,இயக்கத்தில் வெளிவந்துள்ள ஆறுபடை படத்தில் கதையிலும் திரைக்கதையிலும் இருக்கும் புதுமைகூட வசனத்திலும்,இயக்கத்திலும் இல்லாதது கொடுமை!

# உலகை உலுக்கும் பொருளாதார பெருமந்தம்



ஏ.சி.ஜோர்ஜ்
ஆசிரிய ஆலோசகர்
யாழ்.வலயக் கல்வி அலுவலகம்

(நேற்றைய தொடர்ச்சி....)

**2008 இன் நிதிநெருக்கடியின் பின்னணி**
**(Background of financial Crisis)**

புதிய தாராளவாத சிந்தனையின் பின்னணியில் அமெரிக்காவின் நிதிச்சந்தையில் நெடுங்காலமாக வீட்டு அடமானக் கடன் வழங்கும் முறையானது (Home Mortage Market) de regulatory முறையில் செயற்பட்டு வந்தது. அதாவது அமெரிக்காவின்நிதிச் சந்தையும், நிதிநிறுவனங்களும் வீடு கொள்வனவிற்கான கடனை அரச தலையீடுகளுக்கு உட்படாமல் Rule of the Market க்கு ஏற்ப இயங்கி வந்தது. அதாவது ரீகன்-தட்சர் நவ தாராளவாத சிந்தனையில் (Regan Thatcher ideology) வீட்டு அடமான சந்தையானது USA யில் இயங்கி வந்தது. அமெரிக்க வங்கிகள் வணிக வங்கி செயற்பாடுகளுக்கு அப்பால் ஏனைய நிதி நிறுவனங்களுடன் போட்டி போட்டு வீட்டுக் கடன் வழங்கல் சந்தையில் அதிகளவு பணத்தினை இறைத்தனர்.

திறந்த சந்தை முறையின் அற்புதமான சந்தர்ப்பங்கள் இவை என அமெரிக்க இளம் தலை முறையினர் வங்கிகளிடம் இருந்து வீட்டுக் கடனை (Housing Loan) பெற்றனர். இதனால் தாம் உழைத்ததிற்கு மேலாக செலவு செய்தனர். தமது ஊக வியாபாரத்தில் அதிகளவு ஈடுபட்டனர். (Speculative Business) வீட்டு அடமான கடன்கள் கடன் பத்திர பாதுகாப்பு முறையிலேயே நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்டது. அதாவது (Mortgage backed securities) அடிப்படையிலே வீட்டுகடன்கள் வழங்கப்பட்டு வந்தன. நவதாராளவாதப் பொருளாதாரத்தில் நுகர்வுச் சமூகமொன்றில் நுகர்வானது பெருமளவு ஊக்குவிக்கப்பட்ட நிலையில், அமெரிக்கர்கள் ஊக வாணிபத்திலும் வருமானத்திற்கு மேலான நுகர்வுச்செயற்பாட்டிலும் இருதசாப்தங்களாகஈடுபட்டு வந்தனர்.

உதாரணத்திற்கு உலகின் 5 வீதத்திற்கும் குறைவான சனத்தொகைகையைக் கொண்ட அமெரிக்கர்கள் உலக எரிபொருள் நுகர்வில் (Crude oil) 40% நுகர்ந்து வருகின்றனர். ஒரு அமெரிக்கர் 10 முதல் 15 வரையிலான கடன் அட்டைகளைப் பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. (Credit Cards)

1995க்கும்- 2005க்கும் இடையில்அமெரிக்கர்களின் கடன் நான்கு மடங்காக அதிகரித்தது. வீட்டு அடமானத் தொழில் (Mortgage Industries home loans are often Packaged together and converted into financial products called mortgage- backed securites) இவை முதலீட்டாளர்களுக்கு உலகம் பூராகவும் விற்கப்பட்டன. வீட்டு அடமான தொழிலின் கொடுக்கல் வாங்கலானது Sup prime மட்டத்தில் மற்றைய கடன் வழங்கல் துறைகளுடன் ஒப்பிடுமிடத்து காணப்பட்டது.

அதாவது (Poor quality) தரம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. தரம் குறைந்த மட்டத்தில் வங்கிகள் கடன் அடமான நிறுவனங்களுடன் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு கடன் உத்தரவாதத்தினை சந்தை வட்டிவீதத்திற்கும் குறைவாக வழங்கி வந்தமையானது ஒரு Sup Prime நடவடிக்கையாகும்.

Sup Prime அடமானமாக 1.3 Trillion U.S $ கடனை 2007 வரையில் நிதி நிறுவனங்கள் வழங்கின.

நிதிச் சந்தை (Financial Markets) என்னும் போது பொருளியலில் அது பணம், அந்நிய செலவாணி, பொருட்கள், பங்குகள், பிணைகள், முறிகள், திறைசேரி உண்டியல்கள், கடன் அட்டைகள், Letter of credit, முதலீடுகள் என்ற சகலதையும் கருதுவதுடன், அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது. (inter linked)

இதனால் ஒரு சந்தையில் நிகழும் நெருக்கடிகள் ஏனைய சந்தைகளிலும் தாக்கத்தினை தரும். 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் கடந்த 20 வருடங்களாக அமெரிக்க மக்கள் அடமான தொழிலில் பெற்று வந்த கடன்கள் மற்றும் அமெரிக்கர்களின் கடன் அட்டை பழக்கங்கள் யாவும் சேர்ந்து பெரும் நிதி நெருக்கடியொன்றினை அமெரிக்க வால் வீதி (Wall Street) நிதி நிறுவனங்கள் எதிர்கொண்டன.

1992-2006க்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் வீட்டு விலைகள் 62% அளவிற்கு உயர்ந்து சென்றன.

வீட்டு அடமானமாகக் கடன்களைப் பெற்ற அமெரிக்கர்கள் பலர் அதனை திருப்பிச் செலுத்தத் தவறினர் அல்லது செலுத்துவதற்கு வலுவற்று இருந்தனர். இக்காரணத்தினால் படிப்படியாக கடனை மீள்ப்புச் செய்யாதோரின் தொகை அதிகரித்தது.

கடனை வழங்கப் பிணை நின்ற நிதி நிறுவனங்கள் நெருக்கடிக்குள்ளாகின. வங்கிகளும் அடமான நிறுவனங்களும் தமது கையினை கடனாளிகள் மீது இறுக்கிப் பிடித்தன. (The housing bubble burst) வங்கிகள் வட்டி வீதங்களை அதிகரித்ததுடன் கடன் வழங்கல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தின. கடனை மீளச் செலுத்த முடியாதோர், அடமான அடிப்படையில் வீடுகளைப் பெற்றோர் வீடுகளையும் பத்திரங்களையும் (Securites) அடமான நிறுவனங்களிடமும் வங்கிகளிடமும் கொடுத்து விட்டு வெளியேறினர். இரு தசாப்தங்களாக அதிகரித்து வந்த வீட்டு விலைகள் இதனால் வீழ்ச்சியடைந்தன. பெருமளவு கடன்களும் சொத்துக்களது வீழ்ச்சியும் வங்கிகள் கடன் வழங்குவதில் தமது பிடியினை இறுக்கின.

சிறிய கார் ஒன்றினை வாங்குவதற்கான கடனைக்கூடப்பெற முடியவில்லை. வங்கிகளுக்கு வங்கிகள் கடன் வழங்குவதற்கு மறுத்தன. Investers flee stocks and banks are trapped in cycle of decling value. வங்கிகள் Collateral leeverage நடவடிக்கையை மேற்கொண்ட நிதிச் சந்தையொன்றில் சங்கிலித் தொடரான சரிவுகள் வால் ஸ்ரீட் நிதி நிறுவனங்கள் அனைத்தினையும் பாதித்ததுடன் அதனுடன் தொடர்புடைய ஏனைய சந்தைகளையும் பாதித்தது. உலகின் பல பகுதிகளிலும் இது எதிரொலித்தது.

அமெரிக்காவின் அடமானத் தொழிலில் (Mortgaged Industry) ஆரம்பித்த நெருக்கடி ஏனைய துறைகளையும் அதனுடன் தொடர்புடைய சர்வதேச நாடுகளையும் பாதித்தது. அமெரிக்க நிதி நெருக்கடியினை சமாளிக்க 700 பில்லியன் U.S. டொலர் மீட்பு (Bail out) நிதியளிப்பு நடவடிக்கையொன்றினை அமெரிக்க ஜனாதிபதி அறிவிக்க வேண்டி ஏற்பட்டது.

அமெரிக்காவில் தொடங்கிய நிதி நெருக்கடி உலகின் பல பாகங்களிலும் எதிரொலித்ததின் உண்மைக் காரணம் உலகமயமாதல் நெருக்கடியாகும். (The real Problem we face today is not a financial crisis. It is a crisis of globalization)

பொருளியல் நோக்கில் பரிசு பெற்றவரும், ஒரு சமயம் வெள்ளை மாளிகையின் நிதி சார் விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்தவருமான பொருளியலாளர் Joseph E.Stiglitz தற்போதைய நெருக்கடியினை சுருக்கமாக பின்வருமாறு பார்க்கிறார்.

எமது கண்களுக்கு முன்னால் ரீகன் - தட்சரின் கோட்பாடு (ideology) சரிந்து கொண்டு இருக்கிறது. கட்டற்ற சந்தை (Free market) யின் பொற்காலம் முடிவடைகின்றது. (The Golden era of free markets) இலகுவான கடன் வசதி (easy credit), அதிக ஆபத்துக் கொண்ட உத்தேச வர்த்தகம் என்பன நெருக்கடிக்குள்ளாகி மாறாக கட்டுப்பாடான பண வழங்கல் (Tight money) கடுமையான ஒழுங்கு விதிகள் (Tough regulation) குறைந்த ஊக வாணிபம் (Less speculation) அத்துடன் அதிகளவான அரச தலையீடு ஆகிய நிலைமைகளின் தோற்றமானது உலக நிதிச் சந்தையில் அமெரிக்காவின் மேலாதிக்கம் முடிவுக்கு வந்ததினையும் (end of America as a financial super power) முதலாளித்துவ பொருளாதாரத்தின் வீழ்ச்சி எனவும் அவர் கூறுகின்றார்.

மேலும் இந்நிலைமையானது திடீரென தோன்றவில்லை எனவும் 1970 களில் ஆரம்பித்த இந்தப் போக்கானது கடந்த இரண்டு தசாப்தங்களில் இன்றைய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. றொனால்ட் ரீகன்- மாகிரட் தட்சரின் கோட்பாடு முடிவடைந்துள்ளது. சந்தையில் Sup Prime நடவடிக்கையும் deregulation சித்தனையும் தற்போதைய நிலைமைகளுக்கு அடிப்படைக் காரணமாகும்.

அன்ரோனியே கிறாம்சி (Antonio Gramsi) என்ற பின் நவீனத்துவவாதி The concept of cultural hedgemony என்பதில் கூறியவாறு அமெரிக்க வெள்ளை மாளிகை நிதி அதிகாரிகளும், wall street நிதி நிறுவனங்களும் அமெரிக்க மக்களை சிந்திக்கவிடாது Free market பற்றிய தேவ மந்திரத்தினை அவர்களது தலையில் சுமத்தின. அதாவது கிறாம்ஸ்கி பின்வருமாறு இதனைக் கூறுகின்றார்.

If you can occupy peoples heads, their hearts and hands will follow. மேற்படி நிலைமையே அமெரிக்க மக்களிடம் காணப்பட்டது. மில்டன் பிறீட்மன் போன்ற பொருளியலாளர்களின் சிந்தனைகள் அமெரிக்க மக்கள் அடமான கடன்களுக்காகவும் கடன் அட்டைகளுக்காகவும் தமது வருமானத்திற்கு மேலாக தூண்டப்பட்டார்கள்.

நாணயவாதமும் நிதிசார் தளர்க்துகையும் உலகை இந்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன.

'Markets can't Rule them selfs' என்ற கட்டுரையில் Joseph E.Stiglitz சந்தையில் அரசாங்கமானது பலமான பாத்திரமொன்றினை (Stronger role) ஏற்காதவரையில் நிதிச் சந்தைகள் முழுமையான செயற்பாட்டிற்கு வர இயலாது.

மேலும் Stiglitz லின் வாதத்தின் படி அரசாங்கமானது சந்தைகளை விட வலிமையானதாகும் (government are more powerful than markets) கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் தலையீடு சந்தைகளை உறுதிப்படுத்தியுள்ளன. (Stabilized) There will be a return of regulation. But regulation is not socialism J.E.Stiglitz மேலும் கூறுகையில் பொருளாதார கோட்பாடும் வரலாற்று அனுபவமும் நிதிச் சந்தையில் ஒழுங்குபடுத்தல் முறையொன்று (regulatory) அவசியம் என்பதினை கடந்த காலங்களில் காட்டியுள்ளது.

ஆனால் இதற்கு மாறாக நீகளின் ஒழுங்குபடுத்தா வாதம் (deregulation) அமெரிக்காவில் ஒரு மதமாக (religion) பின்பற்றப்பட்டு வந்தது. நூற்றுக்கணக்கான கோடி டொலர்கள் வீட்டு அடமான கடனுக்காக ஒதுக்கப்பட்டன. ஆனால் அதனைப் பெற்றவர் திருப்பிச் செலுத்துவதற்கான வல்லமையைக் கொண்டிருக்கவில்லை.

மில்டன் பீரிட்மனின் Free-Banking,Free-Market என்பன 1987 இல் சிரியில் பின்பற்றப்பட்டபோது பெரும் நிதி நெருக்கடி தோன்றியது. 1997 இல் கிழக்காசிய நாடுகளிலும் இத்தகையவொரு நிலை தோன்றியது. Stiglitz சின் சிந்தனைகளை நோக்கும் போது நிதித் தளர்த்துகை உலகப் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்ததாகின்றது.

அமெரிக்க நிதிச் சந்தையில் தோன்றிய இந்த நெருக்கடி உலகம் முழுவதினையும் நெருக்கடிக்குள் தள்ளி மீண்டுமொரு பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும் அளவு நகர்வதாக பொருளியல் பண்டிதர்கள் கூறுகின்றனர்.

வங்கிகளின் வீழ்ச்சி, பங்குச் சந்ததைகளின் இறக்கம், உற்பத்தித் தொழிலில் பல்லாயிரக் கணக்கானோர் வேலையிழப்பு ILO வின் அறிக்கைப் படி 2008க்கும் 2007க்கும் இடையில் 18 மில்லியன் முதல் 30 மில்லியன் தொழிலாளர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தொழில் வாய்ப்பினை இழந்துள்ளனர். இந்நிலை தொடருமானால் 50 மில்லியன் பேர் வேலை வாய்பினை இழப்பர் என்றும் தற்போதை உலக நிதி நெருக்கடி 200 மில்லியன் தொழிலாளர்களை கடுமையான வறுமைக்குத் தள்ளி விட்டுள்ளது என்றும் I LO கூறுகின்றது.

இதுதவிர உலகின் பல பாகங்களிலும் உற்பத்தி வீழ்ச்சி, பங்குச் சந்தைகளின் சரிவு என்பன தொடர் நிகழ்வாக இடம்பெற்று வருவதினை ஊடகங்கள் வெளிப் படுத்தி வருகின்றன. G-8 நாடுகளும், G-20 நாடுகளும் அமெரிக்காவும் உலகப் பொருளாதாரத்திற்கு முண்டு கொடுக்கும் பல உபாயங்களில் ஈடுபட்டு வருகின்றன.

**உலகப் பொருளாதார நெருக்கடி பற்றிய மாக்சிய கண்ணோட்டம்**

மாக்சிய பொருளியல் பண்டிதர்களும் மாக்சிய வாதிகளும் சில மூன்றாம் உலகப் பொருளியல் விற்பனர்களும் தற்போதைய Economic down turn or Economic recession or Finanacial crisis எனப் பல சொற்களால் அழைக்கப்படும் இந் நெருக்கடியினை வேறொரு வகையில் பார்க்கின்றதுடன் அதுவே உண்மையான காரணம் எனவும் விளக்குகின்றனர். இவர்களுள் மிகப் பிரபல்ய மான பொருளியல் பண்டிதர் சமீர் அமீன் (Samir Amin) என்பவர் முக்கியமானவர். அவருடைய கருத்துக்களே பெருமளவு மாக்சிய கண்ணோட்டம் என்பதில் பதிவு செய்யப்படுகின்றது. தற்போதைய நெருக்கடிக்கு அளிக்கப்பட்ட வியாக்கியானம் deregulation என்பதுடன் வால் ஸ்ரீட் நிதி நிறுவனங்களின் Sup Prime வணிக நடவடிக்கைகளுமே காரணங்களாகக் கூறி வருகின்றனர்.

சமீர் அமீனின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதாரமொன்றின் இயல்பான நெருக்கடியே இது. நெருக்கடியில் பனிப் பாறையொன்றின் நுனிப்பகுதி மட்டுமே தற்போதைய நீதி நெருக்கடியாகும். (Systemic crisis of Captitalism on tip of the Ice berg) இவ் நெருக்கடியானது வங்கிகளின் பொறுப்பற்ற தனத்தினாலோ அல்லது கட்டற்ற சந்தையொன்றில் சுதந்திரமான deregulatory முறையில் இயங்குவதினாலோ ஏற்படவில்லை.

மாறாக தற்போதைய நெருக்கடியின் உண்மையான தோற்றம் புதிய நவதாராள வாத உலக மயமாக்கல் (Neo liberal globalization) முறையின் தோல்வியாகும். இப் பொருளாதார முறையில் மூலதனமானது பெருமளவில் ஒரு சில நிறுவனங்களின் கைகளில் சேர்ந்துள்ளது அல்லது மத்தியப் படுத்தப்பட்டுள்ளது.

குறைந்தது உலகின் 5000 சிலா உரிமை நிறுவனங்களிடம் மூலதனம் சிறைப்பட்டுள்ளது. தேசங்களினதும் சர்வதேசத்தினதும் தலைவிதியினை தீர்மானிக்கும் வல்லமை இந் நிறுவனங்களிடையே காணப்படுகின்றது. 50 வருடங்களுக்கு முன்னர் இந்நிலைமை காணப்படவில்லை. Financilization மூலம் பெருமளவு இலாபம் சிலா உரிமை நிறுவனங்களிடம் போய் சேர்ந்துள்ளன. இதற்கு சந்தையில் deregulation இவர்களுக்கு உதவியுள்ளது. தொழிலாளர்களும் மத்திய வகுப்பும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

முதலாளித்துவ பொருளாதாரங்களில் சந்தை தோல்வியானது Market Failures பல நூறு வருடங்களாக காலத்திற்குக் காலம் இடம் பெற்று வந்துள்ளது.

எனவே முதலாளித்துவ பொருளாதாரங்களில் Crisis after Crisis அதன் பண்புகளில் ஒன்று 3.6 மில்லியன் அமெரிக்கர்கள் தமது வீடு வாசல்களை Sup Prime Mortgage நெருக்கடியால் இழந்துள்ளனர்.

இலாபத்தினையும் சுரண்டலையும் நோக்காகக் கொண்டு பொருளாதாரங்களில் இது தவிர்க்க முடியாதது. மிகை உற்பத்தியும் சுரண்டலும் கொண்ட பொருளாதாரத்தில் நுகர்வானது மேற்படி கீழ்த்தரமான வங்கி நடவடிக்கைகளால் தூண்டப்படும் பொருளாதாரமொன்றில்நெருக்கடிகள்மலிந்துகாணப்படும்.

நவதாராளவாதப் பொருளாதாரம் ஆபத்தின் விளிம்பிற்கு வந்துள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரங்களால் குறிப்பாக G-8 நாடுகளால் சரிவின் விளிம்பிலுள்ள பொருளாதாரத்தினை முண்டுகொடுத்து Bail out நிமிர்த்த முடியாது போய் உள்ளமையினால் G -20 நாடுகளின் குழுவை, முண்டுகொடுத்து மீட்டெடுக்கும் G-8 நாடுகளுடன் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரங்களினால் தனித்துச் செயற்பட முடியாத புதியவொரு போக்கும் தோன்றியுள்ளது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச மகளிர் தினமும்



மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. பெண்கள் சார்ந்த பிரச்சினைகளை மக்கள் மத்தியில் பரப்புரை செய்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி, பெண்களை அபிவிருத்திப் பாதையில் முன் நோக்கி நகர்ந்த இவர்களை அணி திரட்டவும், ஒத்து மொட்டான வளர்ச்சிக்கும் வழிவகுக்க வேண்டுமென்பதே இத் தினத்தின் நோக்கங்களாக இருக்கின்றன. பெண்கள் பல் துறைகளில் நெருக்கடிக்குட்பட்டுள்ளனர். கடுமையாக பயனுருவப்படுகின்றனர். இவர்கள் தங்களது உழைப்புக்குஏற்றவருமானத்தைப்பெறவில்லை. சமூக - அரசியல் நிலையில் தாழ்வுற்ற நிலைகளில் உள்ளனர். என்று கருதப்பட்டு இவர்களது நிலையை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கில் ஐக்கிய நாடுகள் 1975 -1985 இடைப்பட்ட காலத்தைப் பெண்கள் முன்னேற்றகர தசாப்தமாக தீர்மானித்தனர்.

இந்த செயற்திட்டத்தினால் ஊக்கமும், உற்சாகமும் பெற்ற பெண்ணியவாதிகளும் மற்றும் பெண்கள் அமைப்புக்களும் கொடுத்த அழுத்தத்தினால் அனேகமான எல்லா அபிவிருத்தி நிறுவனங்களும் பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கான கருத் திட்டங்களையும் , செயல் நிகழ்ச்சிகளையும் சர்வதேச ரீதியாக முன்னெடுத்தனர்.

பலரது ஆய்வுகளின் படி அபிவிருத்தியில் பெண்களின் பங்கு பற்றல் குறைவாக இருப்பதாலேயே, இவர்கள் பொருளாதாரப் பயன்களைப் பெற முடியாது போகின்றனர்என கருத்து வெளியிடப்பட்டது. இதனால் பெண்களின் பங்கு பற்றலை அதிகரிப்பதன் மூலமே வேலை வாய்ப்புக்கள் . வருமானம் ஆகியவற்றில் இவர்களது பங்கை அதிகரிப்பதுடன் பெண்களின் வாழ்க்கை தரத்தையும் உயர் த்த முடியுமென முற்போக்கு, தாராள சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன. உலகின் பல பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட பல ஆய்வுகளின் படி பல துறைகளில் பெண்ணின் நிலைமைகள் கவலைக் குரியதாக இருந்தன. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவே பெரும் வாழ்க்கை போராட்டம் நடத்த வேண்டியவர்களாக இருந்தனர்.

பல ஆய்வுகளின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை பெண்கள் நிலை தொடர்பாக பின்வரும் தரவுகளைச் சுட்டிக் காட்டியது. அவையாவன,

1. உலக சனத் தொகையில் பெண்கள் அரைவாசிப் பேராகவுள்ளனர்.

2. உல வேலை நேரத்தில் மூன்றில் இரண்டு பங்கை பெண்களே செய்கின்றனர்.

3. பெண்கள் உலக வருமானத்தில் பத்திலொன்றையே பெறுகின்றனர்.

4. உலக சொத்தில் நூறில் ஒரு பங்கையே பெண்கள் கொண்டுள்ளனர்.

மேலும் ஐக்கிய நாடுகள் குறிப்பிட்ட பெண் முன்னேற்ற தாசாப்தத்தில் பெண்களின் நிலையில் முன்னேற்றம் பெரிதும் ஏற்பட்டதுடன் இவர்களது வாழ்வியல் நிலை மேலும் நலிவுற்றது. வளங்கள் , சுகாதாரம் , ஊட்டச்சத்து, கல்வி போன்றவற்றைப் பெறும் வாய்ப்புக்கள் குறைவடைந்ததுடன் இவர்களின் வேலைப்பளுவும் அதிகரித்தது. இச் சூழ் நிலையில் பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒருங்கிணைப்பாளர்களின் அணுகு முறை செயற்படுத்தும் திறன் குறைவாக இருந்ததால் பெண்களின் அபிவிருத்தி பற்றிய கற்கை தீவிரமாக்கப்பட்டது.

### பெண்கள் அபிவிருத்தி மாநாடுகள்

1975 இல் மெக்சிக்கோவிலும், 1980இல் கோப்பன் ஹேகனிலும் இடம் பெற்ற மாநாடுகளில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இவற்றுடன் தொடர்பான பெண்ணிய கோட்பாடு பற்றி கடினமான விவாதம் இடம் பெற்றன. 1985 இல் இடம் பெற்ற பெண்களின் அபிவிருத்தி பற்றிய மகாநாட்டில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெண்களின் பிரதான பிரச்சினைகளை இனங் கண்டார்கள். இவர்களது விவாதத்திற்கு உட்பட்ட முக்கிய பிரச்சினைகளாவன. பால்சார் வன் செயல், வளங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் பெண்கள் புறந்தள்ளப்படும் நிலை, சொத்துக்களை பெண் தன்மையாக்கல், சமூகங்களில் இன்றுள்ள கூட்டமைப்புக்களைத் தீவிரமாக அணுகுதல் போன்றவையாகும் . இம் மகாநாட்டுக்குப் பிறகு பெண்ணியம் மேற்கு நாட்டுப் பெண்களின் கரிசனையில் மாத்திரம் இல்லாது பல் தன்மை பெற்ற அமைப்பாக மாறி பல்வேறு பிராந்திய அமைப்புக்களாக விரிவாக்கம் பெற்றது. இதனைத் தொடர்ந்து மூன்றாம் உலகப் பெண்கள் பெண்ணியத்தை உள்வாங்கிய புதிய அபிவிருத்திக் கோட்பாடுகளை வேண்டி நின்றனர்.

### பெண்களை அபிவருத்தி முகவர்களாக வலுவூட்ட வேண்டும்

பெண்களை அபிவிருத்தியின் பிரச்சினையாகப் பார்க்காது இவர்களை அபிவிருத்தி முகவர்களாக வலுவூட்ட வேண்டுமென்றனர். குறுகிய கால சீர்படுத்தல் அணுகு முறை மாத்திரம் பலன் தராது என்றும் நீண்ட கால அபிவிருத்தி தந்திரோபாயங்கள் கடைப்படிக்க வேண்டுமென்று நின்றனர். பெண்களின் வாழ்க்கையை செல்வாக்குச் செலுத்தும், தீர்மானிக்கும் பொருளாதாரத் தீர்மானங்களில் இவர்களும் பங்கு கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அபிவிருத்தி வரைவிலக்கணத்திலும் கொள்கைத் தெரிவுகளிலும் பெண்கள் குரல் கேட்க வேண்டும். அவர்களது அபிலாசைகள் உள்வாங்கப்பட்ட வேண்டும். எனக் கூறப்பட்டது. இதன் வழியாகபெண்கள்வலுவூட்டல் செயற்பாடு மூன்றாம் உலகப்பெண்கள்மத்தியில்முன்னெடுக்கப்பட்டது.

# யாழ்ப்பாண பெண்கள் நிலையும்

### நான்காவது பெண்கள் மாநாடு

றைகோ மாநாட்டுத் தீர்மானங்கள் செயற்பாடுகளுக்கு ஒரு படி மேல் 1995 இல் பிறீல் கில் நடை பெற்றநான்காவது பெண்கள் மாநாட்டில் செயற்பாட்டு மேடைAction Plat form பெண்களின் மனித உரிமைகள் . கல்வி ,உணவு. சுகாதாரம் கூடிய அரசியல் அதிகாரத்துக்கான உரிமைகள் வலியுறுத்தப்பட்டன. வன்செயலிலிருந்து சுதந்திரம் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. பெண்களின் உரிமைக் குரல் உயர்வாக ஒலித்ததுடன் , செயற்பாடுகளும் விரிவடைந்துடன் மூன்றாம் உலகப் பெண்களின் சமூக பொருளாதர மற்றும் பல்வேறு விடயங்களில் பங்கு பற்றலும் செயற்பாடுகளும் அதிகரித் தன. உலகின் பல நாடுகள் பெண் விவகார அமைச்சு, திணைக்களங்களை முதன் முறையாக உருவாக்கி பெண்கள் அபி விருத்தி தொடர்பான செயற்திட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கின.

19 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் மேற்கு உலகில் முதலாவது பெண்ணிய செயற்பாடுகள் பெண்களின் வாக்குரிமை மற்றும் ஜனநாயக செயற்பாட்டில் பங்கு பற்றல் சார்ந்த பிரச்சினை

## முடிவுறாயுத்தத்தினால் வாழ்வாதாரங்களை இழந்து நிவாரணத்தில் வாழும் நிலையில் தமிழ் பெண்கள்

தொடர்பாக இருந்தது. 1960களில் முதலாளித்தவ முறையில் பெண்கள் பாதிக்கப்படுவதை எடுத்துக் கூறுவதாக இருந்தது. இம் முறையில் காணப்படும் பக்கச் சார்பு. பாகுபாடு காட்டல், முறையற்ற செயற்பாடுகள் பெண்கள் பாதி க்கப் படுவதைக் காட்டி , நீதி கேட்பதாக அமைந்தது. மூன்றாவது பேராட்டம் சமத்துவமின்மை , வறுமை அபிவிருத்தியில் பால் நிலை தொடர்பாக விடயங்கள் முன் எடுக்கப்பட்டன. இவ் விடயங்கள் அபிவிருத்திப் பிரச்சினையைக் கையாளும் சர்வதேச முகவர்களின் கவன ஈர்ப்பைப் பெற்ற தெனக் கொள்ளலாம் . பெண்ணிய அபிவிருத்திக் கோட்பாடு இன்று அங்கீகரிக்கக் கூடிய எண்ணக் கருவாக, போதனையுரையாக செயற்பாடுகளாக இருக்கின்றன.

### பெண்கள் எதிர் நோக்கும் இடர்கள்

பெண்களும் அபிவிருத்தியும் பற்றிய பல கருத்துக்குள் முன்னெடுக்கப்பட்டன. முதலாளித்துவம் பெண்களை பல வழிகளில் பயனுருவாக்கின்ற தென்றும், குறிப்பாக பெண்களை குறைந்த ஊதியத்திலும், கீழ் மட்ட தொழில்களிலும் வைத்திருக்கின்றது என்றும் குறை கூறப்படுகின்றது. முதலாவது உலகப் பெண்கள் கூட உயர் நிலைத்தொழில்களைப் பெற கண்ணாடி தடை glass ceiling இருப்பதாகக் குறைப்படுகின்றனர். மூன்றாம் உலகப் பெண்கள் பாரம்பரிய விவசாயம் மற்றும் தொழில்களிலும், புதிய கைத்தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபடுமிடத்து பல இடர்களையும், பிரச்சினை களையும் எதிர் நோக்கி நிற்கின்றனர். இவர்கள் உற்பத்தி , இனப் பெருக்கம் , சமூக மயமாகல், பல் தன்மை ஆகியவற்றில் பங்கு கொள்ளும் போதும் இவர்களது உழைப்பு ஆண்களாலே அனுபவிக்கப்படுகின்றதென்ற கருத்து நில வுகின்றது. சோசலிச கருத்தைக் கொண்ட பெண்ணிய வாதிகள் கூட செல் நெறி மார்க்சிய கருத்தில் வர்க்கப் போராட்டம், வரலாற்றுப் பொருள் முதல் வாதம் போன்றன தெளிவாக முன்னெடுக்கப்பட்ட போதும் பெண்கள் முன்னேற்றம் பற்றி மார்க்சியத்தில் வெளிப் படையாகக் கருத்து முன் வைக்கப்படவில்லை என ஆதங்கப் படுகின்றனர். ஆண்கள் தலைமைத்துவத்தைக் கொண்ட ஆட்சியமைப்பு, குடும்ப அமைப்பில் பெண்கள் நசுக்கப்படும் அவர்களது உழைப்பு சுரண்டப்பட்டும் இருந்தது. இது வரலாற்றுக் காலங்களிலிருந்து வெவ்வேறு வடிவங்களாக தொடர்கின்றது என்பர்.

### பெண்கள் தொடர்பான அபிவிருத்திக் கோட்பாடுகள்

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பெண்களின் அபிவிருத்தி தொடர்பாக பல அபிவிருத்திக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இவைகளில் முக்கியமா னவை அபிவிருத்தியில் பெண்கள், பெண்களும் அபிவிருத்தியும் , பால் நிலையும் அபிவி ருத்தியும் . பெண்கள் , சூழலும், அபிவிருத்தியும் , பின் நவீனத்துவமும் அபிவிருத்தியும் இத் திட்டங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நிலைப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. பல்வேறு அபிவிருத்தி முகவர்கள் இக் கோட்பாடுகளைப் பின் பற்றி உலகளாவிய நிலையில் பெண்கள் சார்ந்த அபிவிருத்தி முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

அபிவிருத்தியில் பெண்களை இணைத்து செயற்பட வேண்டுமென பல உதவி வழங்கும் நாடுகள், நிதி வழங்கும் நிறுவனங்கள் முன் நிபந்தனை வகிக்கின்றன. . நிதி வழங்கும் நிறுவனங்கள் முன் நிபந்தனை விதிக்கின்றன. ஒவ்வொரு கோட்பாட்டிலும் வெவ்வேறு அணுகு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன ஒவ்வொரு கோட்பாட்டுக்குள்ளும் வேறுபட்ட அணுகு முறைகள் கடைப்பிடிக்கப்படுவதைக் காணலாம். அபிவிருத்தியில் பெண்கள் என்ற கோட் பாட்டுக்குள்ளேயே நலன் நோக்கு அணுகு முறை, சமத்துவ அணுகுமுறை, வறுமைஎதிர்ப்பு அணுகு முறை, வினைத்திறன் அணுகு முறை, வலுவூட்டல் அணுகு முறை போன்றன கடைப்படிக்கப்பட்டுள்ளன.

### பெண்கள் சார்ந்த பிரச்சினைகளில் முன்னேற்றம்

ஆரம்ப காலத்திலிருந்த மேலிருந்து கீழ் (Top down) என்ற செயற்பாட்டு முறையை கைவிட்டு பின்னர் கீழிருந்து மேல் நோக்கிய (Bottom up) செயற்பாட்டு முறைகளை கடைப்பிடித்தன. திட்டங்கள் தயாரிப்பதில் முதலில் மக்களுக்காக திட்டமிடல் என்ற நிலையில் இருந்து மக்களுடன் திட்டமிடல் நிலைக்குச்சென்று இன்று மக்கள் தங்களுக்கு தாங்களே திட்ட மிடல் மேற் கொள்ளக் கூடிய நிலைக்கு கொண்டு வரப் பட்டுள்ளனர். கடந்த 3 தசாப்தங்களாக சர்வதேச சமூகம், ஐக்கிய நாடுகள் சபை, அரசுகள்,

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம் பிள்ளை(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற் கொண்ட முயற்சியில் சர்வதேச ரீதியில் பெண்களின் சமூக- பொருளாதார நிலமை முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க பல வழிகளில் முன்னேற்றம் கண்டுள்ளன.

சம சம்பளம் , கல்வி , சுகாதாரம் , ஊட்டச்சத்து, தொழில் சந்தர்ப்பம், அரசியலில் பங்கு பற்றல் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உலகப் பெண்கள் அடைந்துள்ளார்கள். வறுமை தவிர்ப்பு, ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, பெண்சிசுக் கொலை, பால் பயனுருவல், பால் தொழிலாளர் பிரச்சினை போன்ற பல பெண்கள் சார்ந்த பிரச்சினைகளில் முன்னேற்றம் காணப்பட வேண்டி இருக்கின்றது.

### இலங்கையில் பெண்களின் நிலை

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இலங்கைப் பெண்கள் சமூக -பொருளாதார அரசியல் ரீதியில் உயர்வான நிலையில் இருப்பதாக பல சமூக பொருளாதாரச் சுட்டிகள் காட்டி நிற்கின்றன. கல்வி, சுகாதாரம், ஊட்டச் சத்து, உணவுப் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, சமூக அந்தஸ்து போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் பொருளாதாரத் துறையில் பெண்கள் எல்லா மட்டங்களிலும் துடிப்பான பங்கு பற்றல் காணப்படுகின்றன. பாரம்பரிய விவசாயத்தில், பெருந்தோட்டப்பயிர் செய்கையில், குடிசைக் கைத்தொழிலில், புடவைக்கைத் தொழிலில், சேவைத் தொழில்களில், அரச பணியில், வெளிநாட்டு சேவைகளில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக அல்லது ஆண்களிலும் பார்க்கக் கூடிய நிலையில் பங்கு கொள்கின்றனர்.

மேலும் நிர்வாக உயர் மட்டப் பதவிகளில் குறிப்பிடத்தக்க நிலைக்கு வந்துள்ளனர். இலங்கை அரசியலில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்க பிரதம மந்திரியாகவும், திருமதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமார துங்க ஜனாதிபதியாகவும் இருந்துள்ளனர். இலங்கையில் எல்ல மட்ட அரசியலிலும் பெண்கள் பங்களிப்பு இருந்த பொழுதும் , பெண்கள் பங்கு பற்றல் போதுமானதென்று சொல்வதிற்கில்லை. உள்ளூராட்சி சபைகளில் பெண்கள் பிரதி நிதித்துவம் போதாது இலங்கையில் பெண்ளுக்கு பிரத்தியேக ஒதுக்கீடு இல்லை.

பெண்கள் பொருளாதார செயற்பாடுகளில் கூடியளவு பங்கு பற்றிய பொழுதும் பெண்களினது வாழ்க்கைத் தரம் குறைவென்றே கூறலாம். நாட்டில் மேற் கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் ஓரளவு வறுமை தணிப்பு இருந்தாலும், வறு மையால் பெருமளவு பாதிப்புக்குள்ளாவது பெண்களாகும். மேலும் கடந்த 30 ஆண்டு களுக்காக இடம் பெற்று வரும் முடிவுறாத யுத்தத்தால் ஏற்பட்ட உயிர் இழப்பு, இடப் பெயர்வுகள் , புலம் பெயர்வுகள் , பொருள் இழப்புகள், அகதி வாழ்க்கை போன்றவற்றால் இலங்கை பெண்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு பெண்கள் அதிலும் குறிப்பாக தமிழ் பெண் கள் துன்பத்தில் துயரத்தில் வாழ்வதுடன் வாழ்வாதரங்ளை இழந்து நிவாரணத்தில் வாழும் துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வு, புனருத்தாரணம் . அபிவிருத்தியை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

### யாழ்ப்பாணத்தில் பெண்களின் நிலை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்களின் நிலை எத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன தென நோக்குமிடத்து கசப்பான உணர்வுகள் எழுகின்றன. யாழ்ப்பாண சமூகம் தாய் வழி மரபு கொண்ட நீண்ட பாரம்பரியத்தையுடையது. யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கள் சில பிரச்சினைகளை எதிர் நோக்கிய பொழுதும் கௌரவமான அந்தஸ்தையும், குடும்பத்தில் முக்கிய இடத்தையும் பெற்றுள்ளனர். யாழ்ப்பாண சமூகத்தில் பெண் குழந்தைகளை வர வேற்புக்குரியவர்களாக பிறக்கின்றனர். மகளுக்கு முதல் குழந்தை பெண்ணாகப் பிறப்பதையே தாய், பேர்த்தி மற்றுத் குடும்பத்தவர்கள் விரும்புவது வழக்கம்.

இந்தியாவில் இருக்கும் நிலை போல இங்கு பெண் குழந்தைகளை வெறுப்பதும் இல்லை. அவர்களுக்கு கெடுதல் செய்வதும் இல்லை. குடும்பத்தில் பெண் குழந்தைகள் கூடுதலாகப் பிறந்தாலும் கூட இவர்களைப் பார்ப்பது கடமையாக கருதுவதேயில்லாமல் பெரிய சுமையாக் கருது வதில்லை. ஆண் பிள்ளைகள் அதிகம் இருக்கும் குடும்பங்களிலும் பார்க்க பெண் பிள்ளை அதிகம் இருக்கும் குடும்பங்களே சமூக - பொருளாதார குடும்ப உறவு பேணும் நிலையில் சிறப்பாக இருப்பதாக இங்கு கருதப்படுகின்றது.

(தொடரும்)

# இலங்கை கிரிக்கெட் அணியை பாகிஸ்தானில் குறி வைத்தது யார்?

போர் தனிப்பு களமுனைகளில் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை மாறாக களமுனை உருவாக்கங்களாலும் நிர்ணயிக்கப்படும் என்பதை லாகூரில் நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதல் வெளிப்படுத்துகின்றது.

சுமார் மூன்று தசாப்த காலமாக இலங்கையில் நடைபெறுகின்ற போர் சர்வதேச சக்திகளின் விளையாட்டுஅரங்காக இலங்கையை மாற்றி விட்டது



இலங்கை அணி பயணித்த பஸ்

போன்ற செய்திகள் வெளிவருவது பலருக்கு தெரிந்த விடயம்.

ஆனால் இன்னொரு நாட்டில் இலங்கையை பந்தாகப் பாவிப்பார்கள் என்று யார் எதிர்பார்த்திருப்பார்கள்?

நிச்சயமாக இந்தியாவின் வெளியகப் புலனாய்வு அமைப்பான *றோ* (RAW)வை தவிர பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஓகஸ்ட் 14, 2006 இல் இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவராக இருந்த பசீர் வலி முகமட் மீது கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பகுதியில் குண்டுத்தாக்குதல் நடைபெற்றது. தாக்குதலின் இலக்காக தூதுவரே இருந்தாலும் அவர் நூலிழையில் உயிர் தப்பியிருந்தார். இந்தத் தாக்குதலில் இலங்கை அதிரடிப்படையினர் நால்வர் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் காயமடைந்திருந்தனர்.

வழக்கம் போலவே புலிகளே தாக்குதலுக்கான சூத்திரதாரிகள் என இலங்கை அரசு குற்றம் சாட்டியது. ஆனால் சிறிது காலத்திற்குப் பின்னர் இலங்கையின் ஊடகவியலாளர் குழுவொன்று பாகிஸ்தானுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த பயணத்தின் ஓர் அங்கமாக இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவராக இருந்த பசீர் வலி முகமட்டையும் ஊடகவியலாளர்கள் சந்தித்திருந்தனர்.

இன்னொரு வகையில் கூறப்போனால் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பை பாகிஸ்தானிய புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ (ISI) திட்டமிட்டு ஏற்பாடு செய்திருந்தது.

ஏனெனில் கொழும்பில் பாகிஸ்தானிய தூதுவர் மீதான தாக்குதலின் பின்னணியில் றோவே இருந்தது என்பதற்கான போதிய ஆதாரங்களை ஐ.எஸ்.ஐ திரட்டியிருந்தது.

அதன் அடிப்படையிலேயே, குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக தன்மீதான தாக்குதலுக்கு றோவே பின்னணியிலில் இருந்தது. என்பதை திட்டவட்டமாக தெரிவித்திருந்த பசீர் வலி முகமட், விடுதலைப் புலிகளுக்கும் தன் மீதான தாக்கு தலுக்கும் எந்தவிதமான தொடர்பு மில்லை என வெளிப்படையாகத் தெரிவித்து விடுதலைப் புலிகள் மீதான குற்றச் சாட்டை அடியோடு மறுத் திருந்தார்.

பாகிஸ்தானுக்கும் இலங் கைக்குமான நெருக்கமான உறவின் உயிர்நாடியாக பசீர் வலி முகமட் விளங்கினார். இலங்கையில்

பாகிஸ் தான் ஆழமாக காலூன்று வது தனது தேசிய பாதுகாப் புக்கு குந்தகமாக அமையும் எனக் கருதிய இந்தியா, தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடக்கூடிய நடவடிக்கைகளின் ஆணி வேராகத் திகழ்ந்த பசீர் வலி முகமட்டை கொழும்பில் வைத்து தீர்த்துக்கட்ட முனைந்து தோல்வியடைந்தது.

இருப்பினும் தனது புலனாய்வுப் பணியை தொடர்ச்சியாக முனைப் படுத்தியது. இலங்கையை பொறியாக வைத்து பாகிஸ்தானை நெருக்கடிக் குள் தள்ளுவதன் ஊடாக பாகிஸ்தானுக்கும் இலங் கைக்கும் இடையிலான இராஜதந்திர இராணுவ உறவில் விரிசலை ஏற்படுத்தி தனது கொல்லைப்புறத்தில் தனக்கு எதிரான சக்திகள் காலுன்றுவதை நிறுத்த முடியும் என *றோ* திடமாக நம்புகிறது.

புடவை வியாபாரிகள் போல வேடம் தரித்து மட்டக்களப்பில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் உளவுத் தகவல்களை திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்த *றோ* வின் இரு முக வர்கள், ஐ.எஸ்.ஐ முகவர்களால் படு கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ் தானுக்கு எதிரான தனது நட வடிக்கைகளை *றோ* இலங்கையில் இறுக்க மாக்கியிருந்தது.

இருந்த போதும் பாகிஸ் தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர இராணுவ உறவுகள் வலுப்பட்டனவே தவிர வலிமை இழக்கவில்லை இது றோவுக்கு கடும் எரிச்சலை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது.

அதேவேளையில் ஐ.எஸ். ஐயின் பின்னுதவியுடன் பாகிஸ்தானை தளமா கக்கொண்ட லஸ்கார் –ஈ– தைபா என்ற தீவிரவாத அமைப்பு மும்பாய் மீது மேற் கொண்ட தாக்குதல் றோவுக்கு தலை குனிவை மட்டுமல்ல தடுமாற்றத்தையும் உண்டு பண்ணியிருந்தது. குறிப்பாக பெருமளவான அமெரிக்க ஐரோப்பா சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டமை அனைத்துலக ரீதியில் இந்தியாவுக்கு அவப்பெயரை உண்டு பண்ணியிருந்தது.

அதற்கு இராணுவ ரீதியில் பதிலடி கொடுப்பதற்கு இந்தியா திட்டமிட்டது. ஆனால் கொண்டலீசா றைசின் தலையீடு அதற்கு இட மளிக்கவில்லை.

ஆனால் தனக்கு ஏற்பட்ட தலைக் குனிவுக்கு எதிராக பழிவாங்குவதற்கு *றோ* துடியாய் துடித்து தருணம் பார்த்திருந்தது.



உலங்கு வானூர்தி மூலம் லாகூர் மைதானத்தை விட்டு வெளியேற தயாராகும் இலங்கை அணி

இதேவேளை இலங்கைக்கு தேவையான அனைத்து இரா ணுவ உதவி களை யும் தானே வழங்கு வதனூடாக பாகிஸ்தானின் ஆதிக்கத்தை இலங்கையில்

குறைக்கலாம் என செயற்பட்ட புதுடில் லிக்கு கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி தொடங்கிய வெளிநாட்டு அமைச்சர்களின் 31 ஆவது சார்க் மாநாட்டில் பாகிஸ் தானுக்கும் இலங் கைக்கும் இடையி லான உறவுகள் மென்மேலும் வலுப்படத்தக்க வகையில் இணங் கப்பட்ட உடன்பாடு கள் கடும் விசனத் தையும் சினத்தையும் உண்டு பண்ணியிருந்தது. அதன் காரணமாகவே. இலங்கை போருக்கு முதுகெலும்பாக இருந்து வந்த காங்கிரஸ் விற்பன்னர்கள் திடீரென தமிழ்மக்கள் மீது அக்கறை உள் ளது போல் வெளிக்காட்ட முற்பட் டார்கள்.

கடந்த ஜனவரி 28ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவுடனாக சந்திப்பைத் தொடர்ந்து இராணுவ வெற்றிகள் அரசியல் தீர்வுக்கு வழிகோலுவதோடு, வடக்கு மாகாணத்தில் இயல்பு நிலை தோன்று வதற்கு



தாக்குதல் நடத்தும் ஆயுத தாரிகள்

அடிப்படையாகும் என்ற சாரப்பட கருத்து தெரிவித்த இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி சரியாக ஒரு மாதம் கழிந்த நிலையில் தனது நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றி புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்த வாய்ப்பை இலங்கை அரசாங்கம் சரிவரப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

பிரணாப் முகர்ஜியின் கருத்து என்பது இலங்கை தொடர்பான காய்நகர்த்தலில் *றோ* மீண்டும் ஒரு தடவை தோற்றுப் போனது என்ற கருத்தின் மறுவடிவம் எனக்

கொள்ளலாம்.

இதுவும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தக்கூடிய வகையில்



தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் வாகனம்

லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி மீது தாக்குதலை நடத்துவதற்கு *றோ* திட்டமிட்டமைக்கான பிரதான காரணம்.

அத்துடன் கொழும்பில் நடைபெற்ற போட்டிகளின் போது இந்திய கிரிக்கெட் அணி, சிங்களவர்களின் கல்லெறிக்கு தொடர்ச்சியாக இரு முறை உட்பட்டது.

இது தனது நாட்டு அணியினருக்கு இலங்கை உரிய பாதுகாப்பை வழங்கவில்லை என்ற மனோபாவத்தை புதுடில்லி அதிகார வர்க்கத்தினருக்கு உண்டு பண்ணியிருந்ததாக அறிய முடிகிறது.

அது மட்டுமன்றி இந்திய அணி பாகிஸ் தானில் விளையாட மறுத்த தற்கு பதிலாகவே இலங்கை அணி குறித்த ஆட்டங் களில் பங்கு பற்று வதற்கு ஒப்புதல் அளித்தது .இவையும் றோவின் தரவு சேகரிப்பு கோவைகளில் துணைக்காரணி களாக அடையாள மிடப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்பு பெருமள வில் உள்ளது. இவை அனைத்தையும் தாண்டிய உச்சக் காரணியாக சர்வதேச மட்டத்தில் பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக வெளிப்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் அனுதாபத்தை ஈட்டக்கூடிய ஒரு தாக்குதல் அவசியம் என திட்டமிட்ட *றோ* அதற்கான மிகச் சிறந்த இலக்காக இலங்கை கிரிக்கெட் அணியை தெரிவு செய்தது.

இதன் ஊடாக ஒரே கல்லில் இரு மாங் காயை உடைத்துள்ளது. அதேவேளை இந் தப் பழியையும் புலிகள் மீது போடக்கூடிய கைங்கரியங்களில் *றோ* ஈடுபடத் தொடங்கி

**மதி**

விட்டது. ஆனால் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிணைப்பை விரும்பாத எதிரிகளே லாகூர் தாக்குதலின் பின்னணியில் இருப்பதாக பாகிஸ்தான் திட்டவட்டமாக தெரிவித்து விட்டது.

அவதானங்களை கோர்வையாக்குகின்ற வாசகர்களுக்கு லாகூர் தாக்குதலின் பின்னணியில் யார் உள்ளார்கள் என்பது தற்போது தெளிவாக புரிந்திருக்கும்.

# இந்தியா, அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இலங்கையின் செயற்பாடு

## விக்கிரமபாகு கருணாரட்ன



இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இலங்கையின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இலங்கைக்கு அமெரிக்க இராணுவத்தினரை அழைத்து வருவது தொடர்பில் அண்மையில் கலந்துரையாடல்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது என்று இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன ரிவித்தார். மஹிந்த சிந்தனைக்கு அமைய நாட்டில் வேலைத் திட்டங்கள் இடம்பெறவில்லை.

மாறாக இந்தியாவின் மன்மோகன் சிந்தனைக்கு அமையவே இங்கு அனைத்து விடயங்களும் அமைந்துள்ளன. வடக்கு கிழக்கின் வளங்களை சூறையாடுவதற்கு இந்திய நிறுவனங்ள் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் கடந்த புதன் கிழமை காலை நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கம் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் மாகாண சபைகள் ஏன் உருவாக்கப்பட்டன என்று தெரியாமல் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. முக்கியமாக தமிழ் மக்களின் உரிமை களை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் மாகாண சபை முறைமையின் அதிகாரங்கள் இதுவரை பெற்றுக் கொடுக்கப் படவில்லை காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்படாமல் உள்ளன. கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை தேர்தல் நடைபெற்றது.

ஆனால் கிழக்கு முதலமைச்சர் எந்த அதிகாரங்களும் இன்றியே உள்ளார். இந்தியா அல்லது மத்திய அரசாங்கம் வழங்கும் ஆவணங்களுக்கே கையொப்பம் இட்டுக் கொண்டிருக்கின்றார். மாவட்ட செயலாளர்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் கூட முதலமைச்சர்களுக்கு இல்லை. ஆனால் மாகாண சபைகளுக்கான தேர்தல் களை நடத்துவதற்கு மும்முரம் காட்டப்படுகின்றது.

நாட்டின் அனைத்து செயற்பாடுகளும் செயலிழந்துள்ளன. எதிர்கட்சிகள் ஒழுங்காக செயற்படுவதில்லை. தொழிற்சங்கங்களின் குரல்கள் அடக்கப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை முன்னணி பெயரளவிலேயே சில விடயங்களை எதிர்க்கின்றது.

இனறு அமெரிககாவும இந்தியாவுமே இலங்கையின் விடயங்களுக்கு பின்னால் நின்று செயற்படுகின்றன. அந்த நாடுகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே அனைத்து விடயங்களும் இடம்பெறுகின்றன. வடக்கு கிழக்கின் காணி மற்றும் ஏனைய வளங்களை சூறையாடுவதில் இந்திய நிறுவனங்கள் குறியாகவுள்ளன..

புலிகளிடம் இருந்து சிவிலியன்களை மீட்க அமெரிக்க இராணுவத்தை அழைத்து வருவது குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஹவாய் தீவுகளில் உள்ள இராணுவத்தினரை அழைப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியினரும் தமிழக மக்களும் உண்மையை உணர தொடங் கியுள்ளனர். இந்தியாவில் தற்போது இரு பிரதான கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பி. தவிர்ந்த மூன்றாவது சக்தி ஒன்று உருவெடுத்துக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் நான் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்தேன். அதன்போது அங்கு இலங்கை பிரச்சினை தொடர்பில் இடதுசாரிக் கட்சிகள் ஆராய்ந்தன. அங்கு நான் இலங்கையின் உண்மை நிலைமைகளை விளக்கினேன். யுத்தம் நிறுத்தப்படவேண்டும்என்றும் இலங்கைக்கான ஆயுதம் மற்றும் நிதி உதவிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன் .

ரணில் எம்முடன்இணைந்து போராட்டம் நடத்தியமைக்காக கட்சிக்குள் ஓரம் கட்டப்பட்டு வருகின்றார். அரசாங்கத்தின் முகவர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஊடுருவி உள்ளனர். ருக்மன் சேனநாயக்காவும் கரு ஜெயசூரியவும் ரணிலை எதிர்க்கின்றனர். யுத்தத்தை எதிர்த்த ஐ.தே.க இன்று ஆதரிக்கின்றது.

மாவன் எல்லை பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம்எம்.பி ஒருவர் யுத்தம் பற்றியும் துட்டகெமுனு பற்றியும் பேசுகின்றார். மஹிந்த சிந்தனை இன்று ஐ.தே.கவுக்குள் ஊடுருவி உள்ளது.

வன்னியில்பொது மக்களை புலிகள் சிறை வைத்துள்ளனர் என்று கூற முடியாது அங்கிருப்பவர்கள் புலிகளின் உறவினர்கள் அல்லது நெருங்கியவர்களாக இருக்கலாம் ஆனால் புலிகள் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களை கொலை செய்கின்றமை மற்றும் சிறுவர்களை படையில் இணைத்துக் கொள்கின்றமை ஆகியவற்றை நாம் கண்டிக்கின்றோம்.

புலிகளின் பகுதிகளில் இரு ந்து வவுனியாவுக்கு வந்துள்ள மக்கள் சுதந்திரமாக இருக்கின்றனரா? என்பதும் கேள்விக்குரிய விடயமாகும். தற்போது புலிகள் காயமடைந்தவர்களையும் , கற்பிணிகளையும் அங்கிருந்து அனுப்பிக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிவித்தார். (ஓ-5)

## முன்னோடிப்பரீட்சை

சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் க.பொ.த. உயர்தரம் - 2009 (தரம் 13) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேர்வுச் செயலர் இரா. செல்வ வடிவேல் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் நடாத்தப்படும் மகளிர் தின நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு அளவெட்டி, தம்பாட்டி, சுப்பர்மடம், நாவாந்துறை, கச்சாய் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## பிரியாவிடை வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளராக கடமையாற்றிய பொ. சண்முகசுந்தரம் கடந்த ஜனவரி மாதம் ஓய்வு பெற்றதையிட்டு பிரியாவிடை வழங்கும் வைபவம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாக கூட்டுறவு பதில் செயலாளர் திருமதி வே. செல்லமுத்து தெரிவித்துள்ளார். (ஓ-30)

## உருத்திராபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனிஸ்வரன் வேதஸ்தான உருத்திரா அபிஷேகம் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை காலை 11மணிக்கு ஆரம்பமாகி மதியம் விசேட பூசையும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அன்ன தானமும் நடைபெறும். (ஓ-2)

## வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ளவர்களுக்கு உதவ கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவுவதாக நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்து சமய அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டததில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்து ஆலயங்கள், தர்மகத்தா சபையினர், இந்து சமய அமைப்புகள், பொது அமைப்புகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பொதுமக்களிடமிருந்தும் நன் கொடைகளை எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வுதவிகள் அனைத்தும் யாழ். அரசஅதிபரின் ஊடாகவே வழங்கப்பட்டுள்ளதாகவும் நன்கொடையாளர்கள் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளையில் இந்து சமயப் பேரவை நடைமுறைக்கணக்கு இல 8944 876 இற்கு வைப்புச் செய்வதன் மூலம் அல்லது நேரடியாக பணத்தை கையளிக்க விரும்புவோர் *141, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* எனும் முகவரியில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை அலுவலகத்தில் நேரடியாக கையளித்து பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்வதன் மூலம் இவ் நிதியத்துக்கு பங்களிப்பு செய்யுமாறு இந்து சமய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது. (ஓ-6)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.02.2009 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர்**

**சின்னத்தம்பி ஞானமூர்த்தி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 09.03.2009 திங்கட் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஞானபதி'
இணுவில் மேற்கு,
இணுவில்.

பிரசன்னத்தை
பிரியமுடன் எதிர்பார்க்கும்
**குடும்பத்தினர்.**

(சி-216/இ-9)

## உலகை உலுக்கும்...

*(6ஆம் பக்கத் தொடர்ச்சி)*

சமீர் அமீன் புதிய சர்வதேச ஸ்தாபனங்களின் தேவை பற்றி விவாதிக்கின்றார். (A new Financial global body) இதன் கருத்து IM, IBRD இரட்டை நிறுவனங்கள் தோல்வி அடைந்துள்ளன. புதிய regulatory body யின் தேவை ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கு மேலாக செல்வம், சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பாக புதிய பொருளாதார ஒழுங்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிறார்.

writing the rules for a new world. Todays Problems ignore national boundries. The world needs smart management that does the same. R.B,Zoellick (News week Columist) புதிய வகையான உலகமயமாதல் வேண்டும் என்கிறார்.

பந்தி எழுத்தாளர் (New weed) Rana Forroot கூறுகின்றார். G -8 நாடுகள் பிறேசில், சவுதி அரேபியா, இந்தியா, சீனா போன்ற நாடுக ளையும் தற்போதைய மீட்டு எடுப்பு நடவடிக் கைகளுக்கு கைகொடுக்குமாறு வேண்டுகோள் விடப்பபட்டதினை வைத்து உலகின் நாணய வாதத்தில் அமெரிக்காவின் ''சுப்பர் ஸ்டார்'' நிலை முடிவடைந்துள்ளது என்கிறார் (end of america as a financial super power)

George soros என்னும் உலகின் பிரபல்ய முயற்சியாளர் சந்தைகள் தாமே சமநிலை அடைவதில்லை. அடிப்படை நிலைமைகளையும் அவை பிரதிபலிப்பதில்லை. பண வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்கும் அது போதுமானதில்லை. You must recognize that markets are prone to bubbles ஆகவே ஒழுங்குபடுத்தல் முறைகள் சந்தைகள் தோல்வியடைவதி னையும்பெரிதாவதி னையும்தடுக்கும் என்கிறார்.

மேற்படி நிலைமைகள் நவதாராளவாத பொருளாதாரத்தின் வீழ்ச்சியினையே கோடிகாட்டி நிற்கின்றது.

முதலாளித்துவப் பொருளா தாரம் தனது கருப்பையினுள் அதன் வீழ்ச் சிக்கான சுரண்டல் இலாபநோக்கம். லாபங் கள் ஓரிடத்தில் திரட்டியடைத்தல் என்பனவற்றினால் அது Crisis after Crisis இனை எதிர் நோக்கும்.

இதன் மறுபக்கம் என்னவெனில் மாற்றுப் பொருளாதார முறைமையொன்று இதனிடத்திற்கு அவசியம். முதலாளித்துவ பொருளாதார முறைக்கு மாற்றான பொருளாதார முறை அவசியம். The other world is possible. (முற்றும்)



Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

# இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவ விரும்புவோர் எமது அமைச்சுடன் தொடர்பு கொள்ளலாம்

## மீள்குடியேற்ற இடர் முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன்



வன்னியிலிருந்து வவுனியா நோக்கி இடம்பெயர்ந்து வந்துள்ள அறுபது வயதிற்கும் மேற்பட்டவர்களை முகாமிலிருந்து வெளியேறி அவர்களின் உறவினர்களோடு இணைந்து இருப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இது குறித்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மீள்குடியேற்ற மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீனை நேர்கண்டுள்ளோம்.

*இலங்கை அரசாங்கம் வன்னியிலிருந்து வவுனியா வந்துள்ள மக்களில் அறுபது வயதிற்கு மேற்பட்டோரை சுயாதீனமாக வெளியேற அனுமதியளித்துள்ளதாக அறிகின்றோம். அது குறித்து ஏதேனும் கூற முடியுமா?*

அறுபது வயதிற்கு மேற்பட்டோரை மற்றும் ஊனமுற்றோரை அங்கிருந்து வெளியேறி உறவினர்கள் வெளியில் இருப்பின் அவர்களுடன் சேர்ந்திருப்பதற்கான அல்லது உறவினர்கள் இல்லாவிடின் முதியோர் இல்லங்களில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அதன்படி அறுபது வயதிற்கு மேற்பட்டோரது தரவுகள் தயாரிக்கப்பட்டு அரசாங்க அதிபர் ஊடாக பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்படுகின்ற போது பாதுகாப்புத் தரப்பினர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பார்கள்.

*புதிதாக இடம் பெயர்ந்து வந்துள்ளவர் களது விபரங்களை ஊடகங்கள் மூலமாக அவர்களது உறவினர்களுக்குத் தெரிவிக்கும் ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா?*

அது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். தற்போது அவர்கள் குறித்த தரவுகள் அனைத்தையும் எடுத்திருக்கின்றோம். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்த பின்னர் நாங்கள் அதை நடைமுறைப்படுத்த விரும்புகின்றோம்.

*வவுனியாவில் இவர்களுக்கென சிறப்பான வயோதிபர் இல்லம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா?*

நான் அண்மையில் வவுனியாவிற்கு சென்றிருந்த போது இது குறித்து அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடினேன். அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய தேவைப்பாடு இருக்கின்றது. எனவே அது தொடர்பில் அரசாங்க அதிபர் உரியவர்களுடன் கலந்துரையாடி வருகின்றார்.

*இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வை மேம்படுத்த எவ்வாறான உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்க முடியும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?*

அங்கிருக்கின்ற மக்களுக்கு தற்போது சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தோடு சுகாதார வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. அவர்களுக்கான பாய் போன்ற பொருட்களும் சிறுவர்களுக்கான உடுப்புகளும் கிடைக்கின்ற போது உதவியாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

*ஏனைய நிறுவனங்கள் உதவுவதாயின் எவ்வாறு அவர்கள் தங்களை தொடர்பு கொள்ள முடியும்?*

கொழும்பில் எம்முடைய அமைச்சில் அதனைக் கொண்டு வந்து வழங்கினால் அவற்றை அரசாங்க அதிபர்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இது தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபரோடு 024 222 2235 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளலாம். அல்லது எங்களுடைய அமைச்சில் 011 223 9518 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ள முடியும்.

**அறுபது வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் ஊனமுற்றோரை முகாமிலிருந்து வெளியேறி உறவினர்கள் வெளியில் இருப்பின் அவர்களுடன் சேர்ந்து இருப்பதற்கான அல்லது உறவினர்கள் இல்லாவிடின் முதியோர் இல்லங்களில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.**

*பொருட்கள் தவிர நிதியுதவிகளையும் பெற்று மக்களுக்கு விநியோகிக்கும் ஏற்பாடுகள் உள்ளதா?*

அவர்கள் என்ன பொருட்களை வழங்க வேண்டும் என்பதைத் தெரிவித்து அதற்கான நிதியை அரசாங்க அதிபரிடம் வழங்கினால் அவர் அதனைப் பெற்று மக்களுக்கு கையளிக்கும் விடயங்களை மேற்கொள்வார்.

# சாளரம்

வவுனியா சிதம்பரபுர முகாமில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் வன்னியில் உள்ள தமது குடும்பத்தாரும் உறவினர்களும் எப் போது வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். சிதம்பரபுரம் முகாமில் வசிக்கும் இடம் பெயர்ந்த மக்களிடம் வன்னியிலிருந்து வவுனியா நோக்கி இடம் பெயர்ந்து வரும் மக்கள் தொடர்பாக கருத்துக்களைக் கேட்ட போது அவர்கள் தந்த பதில்கள் இவை.



சிதம்பரபுரம் முகாமில் வசிக்கும் தாய் தன் குழந்தையுடன்

நபர் 1 : அங்கு நிலவுகின்ற கஸ்டநிலை காரணமாக இங்கு வந்து சந்தோசமாக இருக்கலாம் என்றுதான் வருகின்றார்கள். இங்கு அவர்களுக்கு காணிகள் கிடைத்தால் இருக்கலாம் என்ற நம்பிக்கையில் தான் வருகின்றார்கள். இங்கு இருப்பதற்கு அவர்கள் விரும்பினால் இருப்பார்கள். அல்லது நாடு ஒரு சீரான நிலைமைக்கு வந்தால் தமது சொர்ந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள்.

நபர் 2 : நான் நேற்று மெனிக்பாமிற்கு சென்றிருந்தேன். எனது உறவினர்களின் பெயரைச் சொல்லிக் கேட்டேன். அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டார்கள். பின்னர் அவர்களுடன் உரையாடி விட்டுத் திரும்பினேன். பக்கத்து வீட்டுக்காரருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி எம்மை வந்து சந்திக்கும்படி எனது உறவினர்கள் தெரிவித்திருந்தார்கள்.

அதன்படி அவாகளை சந்திக்கச் சென்றேன். இனி வருபவர்களுக்கு காணிகளை வழங்கி அவர்களை வாழ வைக்க வேண்டும். எமக்கு இந்த சூழ்நிலை பழகிவிட்டதால் பரவாயில்லை. முதலில் நாங்கள் பயந்து கொண்டு தான் இங்கு வந்தோம். ஆனால் தற்போது எமக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறது.

நபர் 3 : நான் இங்கு வந்து மூன்று மாதங்களாகின்றது. ஆனால் என் மனைவி, பிள் ளைகள் இன்னும் வரவில்லை. மெனிக்பாமிற்கு வந்திருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் சென்று பார்க்க முடியாமல் இருப்பது கவலையாக உள்ளது. இப்போது தான் அவர்களுடன் வந்திருக்கலாம் என்று நினைக்கின்றேன். எனக்கு இரண்டு படிக் கின்ற பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களது எதிர்காலம் என்னவாகுமோ தெரியவில்லை. வவுனியாவிற்கு வந்ததை நல்லதா கத்தான் நினைக்கின்றேன்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio. Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.


**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம் களில் வாழும் மக்களுக் காகவும் மீள்குடியேறி உள்ள வர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனி தாபிமான செயற்றிட்ட அமைப் புக்களின் ஓர் அங்கமாகும்.



**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம் தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம் நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில் உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள் அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு

தொ.பே. -0774952242

மின்னஞ்சல்-info@lifeline srilanka.com


## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதே எமது நோக்கம். அந்தவகையில் இவ்வாரம் சுயதொழிலின் அவசியம் பற்றி கூறும் எடுத்துக்காட்டு குறுநாடகம் ஒலிபரப்பானது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## எடுத்துக்காட்டு

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதியில் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு எடுத்துக்காட்டு என்ற குறுநாடகம் ஒலிபரப்பாகியது.



இலங்கையைப் பொறுத்த வரையில் அகதி வாழ்க்கையில் அகப்பட்டுள்ள பெண்கள் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் பல்வேறான அசௌகாரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து, நிர்க்கதியாக வாழும் பெண்கள் விடயத்தில் இந்த சமூகத்துக்கு அக்கறை காட்ட வேண்டிய கடப்பாடு உண்டு. அகதிமுகாம் நலன்புரிய நிலையங்களில் வாழும் பெண்களில் சிலர் தமது விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்குரிய வழிகளில் ஈடுபட்டுள்ளார்கள். அவ்வாறான பெண்கள் நிச்சயமாக இந்த சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குவார்கள்.

எமது நாடகத்தில் வரும் கௌரி அவ்வாறான ஒரு பெண்மணிதான். கணவனை இழந்து இரண்டு பெண் பிள்ளைகளுடன் சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து அகதி முகாமில் வாழ்கிறார். தனது பிள்ளைகளை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்பது கௌரியின் கனவு. ஆனால் அதற்கான வசதிவாய்ப்புக்கள் கௌரியிடம் இல்லை. வீட்டு வேலைக்குச் சென்று தனது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகிறாள். அன்றாட செலவுகளுடன் பிள்ளைகளின் படிப்புச் செலவும் கௌரிக்கு பெரும்சாவாலக இருக்கின்றது. கௌரி வேலை செய்யும் வீட்டுக்காரப் பெண் ஒரு தொண்டு நிறுவனத்தில் பணி புரிகிறாள். அவள் கௌரியின் குடும்ப நிலையைப் பார்த்து விட்டு கௌரிக்கு தையல் வேலை தெரியும் என்பதைத் தெரிந்து கொண்டதால் இதுபற்றி தனது நிறுவனத்தில் கூறி ஒரு தையல் இயந் திரத்தை பெற்றுக் கொடுக்கிறாள்.

கௌரி வீட்டு வேலைக்குப் போவதோடு தையல் வேலையையும் பார்த்துக் கொள்கிறாள். நாளடைவில் கௌரியின் முயற்சியால் அதிகமான வாடிக்கையாளர்களை சேர்த்துக் கொள்கிறாள். பின்பு அதே நிறுவனத்தில் தனது தொழில் முன்னேற்றம் பற்றிக் கூறி மேலும் மூன்று தையல் இயந்திரங்களைப் பெற்று அதே முகாமைச் சேர்ந்த நான்கு பெண்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கிறாள். கௌரி தனக்கென ஒரு இடத்தை தயார்படுத்திக் கொள்கிறாள். இந்த முயற்சி பெண்களுக்கு அவசியம்.

எல்லாவற்றையும் இழந்து விட்டோம். எமக்கு உதவிக்கு எவருமே இல்லை என்ற நினைத்து எம்மை நாமே தாழ்த்திக் கொள்ளக் கூடாது. நாம் வாழும் சூழல், எமது குடும்ப நிலை இவற்றைப் பற்றி சிந்தித்து எமக்குத் தெரிந்த தொழிலை வைத்துக் கொண்டு நாம் முன்னேற முயற்சிக்க வேண்டும். நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் பெண்கள் தங்களைத் தாங்களே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டு நாடகம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்பதே எமது நிகழ்ச்சியின் நோக்கம்.

ஒரு சிங்கத்தின் தலைமையில் ஆடுகளைப் படையாகக் கொண்ட அணிவகுப்பு, ஒரு ஆட்டின் தலைமையில் சிங்கங்களைப் படையாகக் கொண்ட அணிவகுப்பை தோற்கடிக்கும்.

– அரேபியா

வலம்புரி

## அமெரிக்கப் படை வருமாயின் அது யுத்தத்தில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும்

வன்னிப் போர்க்களத்தில் சிக்குண்டுள்ள மக்களை மீட்டெடுக்க அமெரிக்க கொமாண்டோப் படைப்பிரிவை அனுப்புவது குறித்து ஆராய்வதாக அமெரிக்க அரசின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச்செயலாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தத்தை உடனடியாகச் செய்து இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துமாறு பொதுக் கருத்துக்கள் மேலெழுந்துள்ள நிலையில் பௌச்சரின் அறிவிப்பு ஆச்சரியமான விடயமே.

அதேநேரம் அமெரிக்கப் படைகள் வன்னிப் போர்க்களத்தில் குதிப்பதென்பது நடந்துவரும் யுத்தத்தின் புதியதோர் அத்தியாயமாக அமையும்.

அதாவது அமெரிக்கப் படைகள் வன்னிப் போர்க்களத்தில் இறங்கிப் பொதுமக்களை மீட்பதென்பது தனியானதொரு யுத்தத்தைத் தோற்றுவிக்கும்.

அமெரிக்கப் படை, இலங்கைப் படை என்ற வகைமையைப் போர்க்களத்தில் பார்ப்பது முடியாத காரியம்.

ஆக, அமெரிக்கப்படை களமிறங்கி பொதுமக்களை மீட்கும்போது இடம்பெறும் போரில் பொதுமக்களின் பாதுகாப்பு நூறு வீதமும் இல்லாத நிலைக்குத் தள்ளப்படும்.

இலங்கை அரசு, தாக்குதலுக்கான அத்தனை பொறுப்புக்களையும் அமெரிக்கப் படைகளிடம் கையளித்துவிட்டு வேடிக்கை பார்க்கும்.

இது போன்றதொரு துரதிர்ஷ்ட நிகழ்வே இந்திய அமைதிப் படையின் வருகையின்போது நடந்தது.

இலங்கைப் படையினரால் அப்பாவித் தமிழ் மக்கள் அழிக்கப்பட்ட கருமம் இந்திய அமைதிப் படையின் கைக்கு மாறியது.

இந்திய அமைதிப் படை இலங்கைப் படையைவிட ஒருபடி மோசமாக நின்று தனது அழித்தல் நடவடிக்கையைச் செய்து முடித்தது.

அந்த வடு இன்னமும் ஆறாத நிலையில், அமெரிக்கப் படையை வன்னிப் போர்க்களத்தில் இறக்கி அங்குள்ள மக்களை மீட்பது என்ற சிந்தனை மிகப்பெரும் ஏக்கத்தையும், பயத்தையும் தமிழ்மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

எனவே வேற்றுநாட்டுப் படைகள் போர்க்களமிறங்கி யுத்தத்தை முடிபுறுத்துதல் என்ற முடிபைவிட, யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்தி உடனடி அமைதியை உருவாக்குவதே பொருத்தமானதும், நடைமுறைக்கு உகந்ததுமான காரியமாகும்.

இதுவிடயம் தொடர்பில் சிந்திப்பதும் செயலாற்றுவதும் பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கான முதன்மை வழியெனலாம்.

# ஐ.நா. சபையில் மூத்த மனித உரிமை ஆலோசகர் இடம் பெறுவதற்கு இலங்கை அரசு இணக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் குழுவில் மூத்த மனித உரிமை ஆலோசகர் இடம் பெறுவதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக நீதித்துறை பணிப்பாளர் மொகான் பீரீஸ் மனித உரிமைகள் ஆணையாளரிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்களைத் தண்டிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அனைத்துக் கட்சி குழுவின் செயற்பாடுகளை முதன்மைப் படுத்தி வருவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் குழுவில் மூத்த மனித உரிமை ஆலோசகர் இடம் பெறுவதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு மொகான் பீரீஸ் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் விடுதலை செய்யப்பட வேண்டும்

## ஊடக மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் கோரிக்கை



(கொழும்பு)

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் விடுதலை செய்யப்பட வேண்டும் என உலகின் முன்னணி ஊடக மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

9 அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இலங்கை அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன. எனினும் அரச தரப்பில் இருந்து இதுவரை எந்தவித பதிலும் வழங்கப்படவில்லை.

அனைத்துலக மன்னிப்புச் சபை எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் கூட்டமைப்பு, அனைத்துலக ஊடக சம்மேளனம் போன்ற அமைப்புக்களை உள்ளடக்கிய ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புக்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் திஸ்ஸநாயகம் பார்வை மற்றும் உடல் நலக்குறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (ஓ-6)

# வன்னி மக்களின் படுகொலையை கண்டித்து நோர்வேயில் மாபெரும் மனித சங்கிலிப்போராட்டம்

(கொழும்பு)

வன்னி மக்களை தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றி படையினது கட்டுப்பாட்டில் முகாம்களில் அடைத்து வைப்பதைக் கண்டித்து நோர்வேயில் மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நோர்வே தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டம் கடந்த வியாழக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணிவரை நடைபெற்றது.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவின் மத்திய தொடரூந்து நிலையத்தில் இருந்து தேசிய திரையரங்கு வரை கார்ல் ஜொஹான்ஸ் வீதியின் இரு மருங்கிலும் தமிழர்கள் பல நூற்றுக்கணக்கில் கைகோர்த்து நின்று வன்னி மக்களை வெளியேற்றும் அரசின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், மூதாளர்கள் என கடும் குளிரின் மத்தியிலும் முழக்கங்களை எழுப்பி பதாதைகளைத் தாங்கியிருந்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

இலங்கை அரசு ஏறிகணைகள் மற்றும் வான் தாக்குதலால் மட்டுமன்றி உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பயன்படுத்தியும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதாக இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

அத்துடன் நோர்வே உட்பட அனைத்துலக நாடுகள் வன்னிக்கு இலங்கை அரசு உணவுப் பொருட்களையும் மருந்துகளையும் அனுப்பி வைப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் நோர்வே வாழ் தமிழ் மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஓ-6)

## சாரணர் சங்கத்தின் ஸ்தாபகர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண இலங்கை சாரணர் சங்கத்தின் 152 ஆவது ஸ்தாபகர் தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ)

# மாற்றம் உடலிலா? உள்ளத்திலா?

## பரமபிதா காட்டிய பாதை


ஒரு தனி மனிதன் மாறினால் குடும்பத்தில் மகிழ்ச்சி. ஒரு குடும்பம் மாறினால் ஒரு சமூகத்திற்கு வளர்ச்சி. மாற்றங்கள் நிகழ்ந்து விட்டால் ஏற்றங்கள் வாழ்வில் வந்துவிடும். மாற்றம், அது இயேசுவைப் போன்றதொரு உருமாற்றமாக இல்லாவிட்டாலும் உள் மாற்றமாவது இருக்கவேண்டும்.

இன்றைய நற்செய்தி இயேசுவின் உருமாற்ற நிகழ்வை ஆழமாக எடுத்துச் சொல்கின்றது. இயேசு தன்னுடைய இலட்சிய வாழ்வை, இறையாட்சிப் பணியை இறுதிவரை, முழுமூச்சோடு செய்து முடிப்பதற்கு அவருக்குள் ஒரு மாற்றம் தேவைப்பட்டது. அது அவரின் உருமாற்ற நிகழ்வே அவரின் இந்த உருமாற்ற நிகழ்விற்கு பல அர்த்தங்கள் உண்டு.

♦ இயேசு கலிலேயா தொடங்கி கல்வாரி மலை நோக்கிய இறையாட்சிப் பணியில் அவர் மனிதனாகப் பிறந்து, இறைவனாக உயிர்க்க வேண்டும் என்பதற்கு இது ஒரு முன் சுவை, முன் நிகழ்வு.

♦ இயேசு தன்னையே கிள்ளிப் பார்த்து, தன்னையே உரசிப் பார்த்து, தன் இலட்சியங்களை, தன் போதனை வாழ்வை முழுமையாக நிறைவேற்றி முடிக்க இறை ஆற்றல், இறை வல்லமை, தந்தையின் உடனிருப்புத்தேவை என்பதை உணர்த்தும் ஒரு நிகழ்வு. இதைத்தான் அங்கு கேட்ட அந்த அசரீரி *இவரே என் அன்பார்ந்த மகன், இவரில் நான் பூரிப் படைகின்றேன்.* எடுத்துரைக்கின்றது.

♦ இயேசு தான் இறைமைந்தன் என்பதை ஆழமாக உணரவும், அதை தம் திருத்தூதர்களுக்கு உணர்த்தவும், இந்த உருமாற்ற நிகழ்வு அவருக்குத் தேவைப்பட்டது. துன்பமே வேண்டாம், வேதனைகள் வேண்டாம், இன்பமே வேண்டும், ஆட்சி அதிகாரமே வேண்டும் (இங்கு தங்கியிருப்பது எத்துணை நலம்) என்று எண்ணிக் கொண்டு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தன் திருத்தூதர்களுக்கு ஒரு ஆழமான பாடம் கற்பிக்கப்படவேண்டும் அதாவது துன்பமின்றி மகிமை இல்லை, சிலுவையின்றி வெற்றியில்லை என்று கற்பிக்கவே இந்த தாபோர் உருமாற்றம்.



இன்று நாமும் மாறவேண்டியவர்களாய் இருக்கின்றோம். நம்முடைய போலி வாழ்விலிருந்து, மாயை உலகினின்று, சுய நல போக்கிலிருந்து, சாதி, மாத, மொழி வெறியிலிருந்து, நான் என்ற அகந்தையிலிருந்து இன்று கண்டிப்பாக மாறவேண்டும் என்று நாம், நம்மைப்பார்க்க மறந்து அடுத்தவனைப் பார்க்கின்றோமோ, அப்போது அடுத்தவர் குற்றம், அடுத்தவர் தவறுகள்தான் நம் கண்ணுக்குத் தெரியும்.

இந்தக் தவக்காலத்திலாவது அடுத்தவனுடைய தவறுகளைப் பார்க்கும் முன், அடுத்தவனை மனம் மாறச் சொல்லும் முன், நம்மையே நாம் உற்றுப்பார்த்து, நாம் முதலில் மாற முயற்சிப்போம். அப்போது தான் வாழ்வில் உண்மை வளர்ச்சி, மகிழ்ச்சி கிடைக்கும். மாறுவோமா?

*ஜோன் ரொபேர்ட்.*

## ஐ.சி.சி. பெண்கள் உலக கிண்ணம்

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது இந்திய அணி




(பௌரல்)

பாரின் துள்ளியமான பந்து வீச்சின் மூலம் முதலாவது போட்டியில் இந்திய பெண்கள் அணி ,பாகிஸ்தான் பெண்கள் அணியை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஐ.சி.சி. பெண் உலகக் கிண்ண கிரிக்கெட் நேற்று அவுஸ்திரேலிய பௌரல் நகரில் ஆரம்பமானது. இதில் முதல் சுற்றுப்போட்டியில் பிரிவு 'பி' யில் உள்ள இந்திய -பாகிஸ்தான் பெண்கள் அணி மோதியது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய பெண்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன டிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் பெண்கள் அணி 29 ஓவர்களில் 57 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

இதில் நயின் அபிடி 11 ,சனாமிர் 17 ஓட்டங்களை அதிக பட்சமாக எடுத்ததுடன் ஏனையோர் இரட்டை இலக்கைக்கூட எட்டவில்லை. பந்துவீச்சில் டார் 8 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர் கள் உட்பட 3 விக்கெட்டுக்களையும் சர்மா ,றோய் ஆகியோர் தலா 2விக்கெட்டுக் களையும் அணித் தலைவி கோஸ்வாமி,சுல்ரானா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 58 ஓட்டங்கள் என்ற சுலபமான வெற்றி இலக்குடன் துடுப்பெடுத் தாடிய் இந்திய பெண்கள் அணி 10 ஓவர்க ளில் விக்கெட் இழப்பின்றி 58 ஓட்டங்களை எடுத்து 10விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதில் டேஸ்பாண்ட் 26, சொப்ரா 17 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர். இவ்வெற்றியின் மூலம் இந்திய பெண்கள் அணிக்கு 2 புள்ளிகள் கிடைத்தன. இதேவேளை மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்து பெண்கள் அணி 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை பெண்கள் அணியை வீழ்த்தியது.

# ஐ.பி.எல்.போட்டிகள் புதிய அட்டவணையில்

(மும்பை)

பாதுகாப்பு காரணங்களுக்காக ஐ.பி.எல். போட்டிகள் புதிய அட்டவணையின் கீழ் நடத் தப்படவுள்ளன.

ஆரம்ப விழா ஜெய்ப்பூருக்குப் பதிலாக மும்மைபயில் நடைபெறவுள்ளது. இரண்டா வது ஐ.பி.எல் தொடர் ஏப்ரல் 11ஆம் திகதி ஆரம்பமாவதாக இருந்தது. இந்த போட் டிகளில் ஆரம்ப விழா ஜெய்ப்பூரில் நடை பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்திய பாராளுமன்ற தேர்தல் 5 கட்டமாக நடைபெறும் என அறிவிக்கப் பட்டதை அடுத்து தேர்தல் திகதிளோடு ஐ.பி. எல் போட்டிகள் நடைபெறாதவகையில் அட் டவணையை மாற்றி அமைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

மேலும் லாகூரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத் தியதை அடுத்து பாதுகாப்பு குறித்த அச்சமும் ஏற்பட்டது. இதனிடையே ஐ.பி.எல் போட்டி அட்ட வணையை மாற்றி அமைக்குமாறு உள் துறை அமைச்சகம் சார்பில் கூறப்பட்டது.

இந் நிலையில் ஐ.பி.எல் போட்டிகள் திருத்தப்பட்ட அட்டவணையோடு நடை பெறும் என்று ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி கூறியுள்ளார். ஐ.பி.எல். போட்டி தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல் நிர் வாக குழு கூட்டத்துக்கு பின்னர் அவர் இந்த தகவலை தெரிவித்தார். புதிய அட்வணை விரைவில் வெளியிடப்படும் என்று அவர் கூறினார்.

ஐ.பி.எல் போட்டிகளுக்கு முழுப் பாது காப்பு வழங்கப்படும் என உள்துறை அமைச் சர் ப.சிதம்பரம் கூறியதற்கு அவர் நன்றி தெரி வித்து கொண்டார். ஐ.பி.எல் போட்டிகள் வேறு நாட்டிற்கு மாற்றப்படும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறிய லலித் மோடி போட்டிகளை நடத்த 14 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக வும் இவற்றில் 8 நகரங்களில் போட்டி நடத் தப்படும் என்று கூறினார்.

தேர்தல் வாக்குப்பதிவுகள் நடைபெறும் நகரங்களில் போட்டிகள் நடத்தப்படாது என் றும் வாக்கு எண்ணிக்கை நாளன்று போட் டிகளின் ஆரம்ப விழா ஜெய்ப்பூருக்கு பதிலாக மும்பையில் நடைபெறும் என தெரிகிறது ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்ப விழா நடைபெறும் என்றும் ஐ.பி.எல்.க்கு நெருக்கமான வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

# ஸ்ரொரஸ் சதம்: இங்கிலாந்து பலம்



(போர்ட் ஒப் ஸ்பெயின்)

அணித்தலைவர் ஸ்ரொரஸின் சிறப்பான சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலா வது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 258 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையில் உள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் நடந்து முடிந்த 4 டெஸ்ட் போட்டிகள் முதலாவது போட்டி யில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவு அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

இந்நிலையில் தீர்க்கமான 5ஆவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் போர்ட் ஒப் ஸ்பெயினில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஸ்ரொரஸின் சிறப்பான சதத்தின் மூலம் நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 2 பிக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 258 ஓட் டங்களை எடுத்திருந்தது.

இதில் தொடரில் மூன்றாவது சதத்ததைப்பூர்த்தி செய்த அணித் தலைவர் ஸ்ரொரஸ் 139 ஓட்டங்களையும் கொலின்பூட் 54 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் பவல் ,ஹைறன்ட்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெற்றது.

# பாகிஸ்தான் நடுவர் ஆபத்தான நிலையில்

(லாகூர்)

லாகூர் பயங்கரவாத தாக்குதலில் படு காயம் அடைந்த பாகிஸ்தான் நடுவர் அசன் ராஜா ஆபத்தான நிலையில் உள்ளார்.

பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாட சென்ற இலங்கை அணியினர் மீது பயங்கர வாதிகள் கடுமையான தாக்குதல் நடத்தினர். இதில் ஜெயவர்த்தனா, சங்ககார உள்ளிட்ட எட்டு இலங்கை வீரர்கள் காயம் அடைந்தனர். சமரவீர மற்றும் பரணவிதனா இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. சமரவீராவுக்கு சத் திரசிகிச்சை மூலம் குண்டுகள் அகற்றப் பட்டது.

லாகூர் டெஸ்டில் மேலதிக நடுவராக பாகிஸ் தானின் அசன் ராஜா செயல்பட்டார். இந்த தாக்குதலின் போது இவர் படுகாயம் அடைந் தார். கல்லீரல் மற்றும் நுரையீரல் பகுதியில்



குண்டு காயங்கள் ஏற்பட்டதாக தெரிகிறது. வைத்தியசாலையில் செயற்கை சுவாசக் கரு விகளின் உதவியுடன் சிகிச்சை எடுத்து வரும் ராஜா ஆபத்தான கட்டத்தை தாண்ட வில்லை என வைத்திய அதிகாரி தெரிவித் துள்ளார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 27





இந்நிலையில் அடுத்து நடைபெற்ற பாகிஸ்தானுடனான 2 டெஸ்ட் , இரண்டு ஒரு நாள் போட்டிகளில் முரளிதரனுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அத்துடன் பாகிஸ்தான் தொடரைத்தொடர்ந்து 1994 செப் ரெம்பர் 4ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற சிங்கர் உலக ஒரு நாள் போட்டி தொடரில் இருந்தும் முரளிதரன் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

பாலா


இத்தொடரில் இந்தியா , பாகிஸ்தான்,அவுஸ்திரேலியா அணி களை வென்று இறுதிப்போட்டி வரை முன்னேறிய இலங்கை அணி அப்போட்டியில் இந்திய அணியிடம் 6 விக் கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து சம்பியனை இழந்தது. தொடர்ந்து 1994ஆம் ஆண்டு ஒக்டோபரில் சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 3 டெஸ்ட்,3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி யது.

இதில் முதலாவது டெஸ்ட் 1994ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை ஹராரேயில் நடைபெற்றது.


இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 383ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் முரளிதரன் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 319ஓட்டங்களை எடுத்து 8விக்கெட்டுக்களையிழந்த நிலை யில் மழை காரணமாக 5ஆம் நாள் ஆட்டம் தடைப்பட போட்டி இரண்டு இன்னிங்ஸ்களுடன் சமநிலையானது. இதில் முரளிதரன் 32 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட டேக்கர் (40) , ஸ்ரீக் (8) ஆகி யோரை வெளியேற்றி 2 விக் கெட்டுக்களை வீழ்த்தினர். இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் 1994ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை புவபாயாவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முத லில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் 9விக்கெட்டுக்களையிழந்து 462 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதில் முரளிதரன் 55 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டமற்ற ஓவர் கள் உட்பட 108 ஓட்டங்களைக்கொடுத்து காம்பலை (18) மட்டும் ஆட்டமிழப்புச் செய்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-32



நேற்றைய பகுதிக்கான விடை



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண் களின் கூட்டுத் தொகை, கட்டங் களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட் டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும். இடமிருந்து வல மாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண் களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

# 7ஆவது 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி



(யாழ்ப்பாணம்)

அணித்தலைவர் செல்ரனின் அதிரடி துடுப்பாட்டத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியிலும் யாழ். மத்திய கல்லூரி அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 7 ஆவது மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி செல்ரனின் அதிரடி அரைச்சதத்தின் மூலம் 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 273 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் அணித்தலைவர் கே.செல்ரன் 71 பந்துகளில் 90 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பை நழுவ விட்டார்.

## செல்ரனின் அதிரடி கைகொடுத்தது


மற்றும் என்.ஜனோசன் 27 பந்துகளில் 29 ஓட்டங்களையும் ஜெரிக்துஷான் 28,எஸ்.அலன் குமார் 25,ரி.சிவகரன் 24,எம்.ஸ்ரீபன்ராஜ் 21, ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஏ.விதுஷன், வி.ஹரிவதனன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் எஸ்.பிரியதர்ஷன் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ரி.இவோன்சன்,எஸ்.அலக்ஸ்ரியோன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 274 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 185 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் எம்.ஹரிப்பிரவீன் 60 ஓட்டங்களையும் ஏ.விதுஷன் 32 ஓட்டங்களையும் அணித்தலைவர் வி.பிரணவன் 30,வி.ஹரிவதனன் 15,பி.ஜெயந்தன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.கோபிகன் 9.4 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் எஸ்.அலன்குமார் 8 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ரி.தர்ஷன் 10 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜி.ஜெரிக்துஷான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



இவ்வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக மூன்றாவது வருடம் யாழ்.மத்திய கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்தது.

இதேவேளை முதல் நான்கு மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் சுற்றுப் போட்டியிலும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி கிண்ணத்தை தன்வசம் வைத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

(5-7,30)

# ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி கைப்பற்றியது



(யாழ்ப்பாணம்)

விறுவிறுப்பாக நடைபெற்ற ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ண 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 21ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணித் த்லைவர் எஸ்.நிரோஷன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 44.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.

இதில்பி.நவதீபன் 40 பந்துகளில் (2 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக)35 ஓட்டங்களையும் எஸ்.மிலாண்டோ 32 ஓட்டங்களையும் ரி.லவதீசன் 22, ஏ.எம்.மனோஜ் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.கஜநாதன்,ரி.பிரியலக்ஷன் மற்றும் அணித் தலைவர் நிரோஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜே.நிகேதன்,பி.சிறிகுகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 166 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 33.4 ஓவர்களில் 95 ஓட்டங் களை மாத்திரம் எடுத்து 8 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த எஸ்.சீராளன்-வி.கஜநாதன் ஜோடியின் 55 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரி அணி கௌரவமான இலக்கை அடைந்தது.

எனினும் இறுதியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 44.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 150 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல் வியடைந்தது.

இதில் எஸ்.சீராளன் 58 பந்துகளில் (4 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் வி.கஜநாதன் 24 பந்துகளில் (ஒரு பவுண்டரி,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் வி.ஜோயல்செகான் 21, எம்.மதுஷன் 17,ஜே.நிகேதன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பி.மைக்கல் 6.5 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் எஸ்.மிலாண்டோ 2 விக்கெட்டுக்களையும் மற்றும் எம்.டி.சஜீந்திரன்,எல்.கஜமுகன் மற்றும் பி.லவதீசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் 15ஆவது முறை ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்தை யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சுவீகரித்ததுடன் கடந்த முறை யாழ்ப்பாணக் கல்லூரி அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

(5-27)

## தமிழ் மக்கள் விடுதலைப்....

இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னான்டோவிடம் உத்தியோகபூர்வ மாக கையளித்தனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்வின் குணதிலக்கா, மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த வீரசூரிய,மாநகர முதல்வர் சிவகீத்தா பிரபாகரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் செயலாளர் எட்வின் சில்வா கைலேஸ்வரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமது அமைப்பிலுள்ள இராணுவ பிரிவு இன்றுடன் கலைக்கப்பட்டு விட்டதாக இதற்கு முன்னதாக இங்கு உரையாற்றிய அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளரான ஆசாத் மௌலானா கூறினார்.

இதன் பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாடொன்று நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் சர்வதேச அமைப்பின் உள்ளூர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தமிழ ஆயுத அமைப்பொன்று இலங்கை அரசாங்கத்திடம் நேரடியாக ஆயுதங்களை கையளிக்கும் முதலாவது நிகழ்வு இதுவாகும்.1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி விடுதலைப் புலிகள் மற்றும் ஈரோஸ் ஆகிய அமைப்புகள் ஆயுதங்களை கையளித்திருந்தாலும் அந்த கையளிப்பானது இந்திய இராணுவம் ஊடாகவே இலங்கை பாதுகாப்புத் தரப்பிடம் கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் இன்று நடைபெற்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கையளிப்பின் போது 56 துப்பாக்கிகள்,சுமார் 6 ஆயிரம் துப்பாக்கி ரவைகள் உட்பட பல்வேறு வகையான ஆயுதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பிலிருந்து வெளியாகிய தகவல்கள் மூலம் இது தெரியவந்துள்ளது.

கையளிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு,

ரி.56 ரக துப்பாக்கிகள் 52,அதற்கான மகசீன்கள் 168 மற்றும் ரவைகள் 2106, எஸ்.எம்.ஜி.ரக துப்பாக்கி 01, ரி 81ரக துப்பாக்கி 01, ஏ.கே.எல்.எம்.ஜி. ரக துப்பாக்கிகள் 02, ஆர். பி.ஜி. உட்பட ஷெல்கள் 46, வெளிச்சக் குண்டுகள் 16,பி.கே.ரவுன்ட்ஸ் 4650, கைக்குண்டுகள் 02 உட்பட பல்வேறு வகையான ஆயுதங்கள் கையளிக்கப்பட்டன.

(ந-5)

## பாதுகாப்புப்...

பிரதேசங்களை உருவாக்கியுள்ளனர் என பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

நிரந்தரமான பாதுகாப்புப் பிரதேசமொன்றை இராணுவத்தினர் அறிவித்தால் அதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பொதுமக்கள் வெளியேறுவதை விடுதலைப்புலிகள் தடுத்து விடுவார்கள் என அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்காலிகமான பாதுகாப்புப் பிரதேசங்கள் மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து பெருமளவான மக்களை வெளியேற்றியுள்ளோம். இதேபோல தொடர்ந்தும் மக்களை வெளியேற்றுவோம் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

(ந-5)

## முல்லைத்...

தற்போது விடுதலைப் புலிகளை 45 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தினுள் முடக்கியிருப்பதாக அது கூறியுள்ளது. புதுக்குடியிருப்பு, பழமாத்தளன், தாமரைக் குளம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற மோதல்களில் ஆயுத தளபாடங்களும் எடுக்கப் பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ந-5,14)

## பயணிகள்...

பெற்றுக் கொண்டவர்கள் தமது அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு மறுதினம் தமது பிரயாணத்தினை மேற் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ந-5)

## புலிகளின் இலக்குகள்...

நிகழ்வொன்றில் ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை விமானப் படையினரின் பங்களிப்பு பாராட்டுக்குரியது.

எதிரிகள் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டபோதிலும், அரசாங்கப் படையினர் கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட மக்கள் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை.

அரசாங்கப் படையினர் மிகவும் நிதானமான முறையில் விடுதலைப் புலிகளின் குறித்த இலக்குகளை மட்டுமே தாக்கி அழிக்கின்றனர். மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு இலங்கை விமானப் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் வேளையில் மிகவும் நிதானமான முறையில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படவேண்டுமெனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி தாய்நாட்டையும் ஒருமைப்பாட்டையும் கௌரவத்தையும் பாதுகாத்து பயங்கரவாதிகளின் விமானப் படைப்பலத்தை முழுமையாக அழிப்பதற்காக விமானப்படை செயலாற்றியதாகவும் தெரிவித்தார். (ந-5)

## வன்னியில்...

(வயது 28), சு.இராசதுரை (வயது 36), சு.சோமசுந்தரம் (வயது 52), ந.அருளம்மா (வயது 63), அ.ஆனந்தமூர்த்தி (வயது 23), ம.மகேஸ்வரி (வயது 24), கே.சசிகலா (வயது 20), க.மகேஸ்வரி (வயது 29), ஜோ.ஜெயரூபன் (வயது 31), ஜோ.லூக்காஸ் (வயது 61), உ.உதயதாஸ் (வயது 15), ச.நவநீதா (வயது 46), ந.மிரேஸ் (வயது 16), எஸ்.செபஸ்தியன் (வயது 50), சி.கபிலன் (வயது 16), தி.பிரேமா (வயது 54), ப.ஜீவமலர் (வயது 49), ஜெ.சர்மிளா (வயது 15), ஜோ.தியாகன்பன் (வயது 17), தி.தியாகசீலன் (வயது 26), ஆகியோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட போது ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். ம.மகேஸ்வரி (வயது 24), சு.ரவீனாஸ் (வயது 14), கே.பிரதீபா (வயது 10), வே.விநாயகமூர்த்தி (வயது70), சு.சோதிலிங்கம் (வயது 30), அ.மார்க்கிரெட் (வயது 70) ஆகியோர் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட போது உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தவறிவிட்டது

வட்டுக்கோட்டை, மாவடிச் சந்தியில் இருந்து 7.3.2009 காலை 786 இலக்கப் பாதை பேருந்தில் யாழ்ப்பாணம் பயணம் செய்த போது ஒரு கைக்கடிகாரம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீ முருகன் களஞ்சியம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை என்ற முகவரியில் தந்துதவவும்.
தொ.பே. 021 222 5459 (C-2185)

## சாலைப்...

சமர் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் அணிகள் அலை அலையாக ஊடறுத்து தாக்குதலை நடத்தியுள்ளனர். 55ஆவது படையணியின் பின்னணி நிலைகளுக்குள் நேற்று முன்தினம் ஊடுருவிய விடுதலைப் புலிகள் பெருமெடுப்பிலான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். சாலைப்பகுதியில் 55 மற்றும் 58ஆவது படையணிகள் இணைப்பை ஏற்படுத்தியிருந்த புள்ளியை மையப்படுத்தியே விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடைபெற்றது.

இத்தாக்குதலில் இரு தரப்பிலும் ஏற்பட்ட சேதங்கள் குறித்தான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. அது தொடர்பான தகவல்கள் பின்னர் அறியத்தரப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

AMT DATA RECOVERY LAB
Definite solution to PERMANENTLY Deleted computer files & software sale including Data Recovery softwares
Contact -071-8561605 (2387)




புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டண சலுகை
## MS Office ## DTP
* Accounting * English * VB.net
## Hardware * Web Developing
* Video Editing *AutoCAD
International Courses...
## MCP ## MCSE ## MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.03.2009 08.00AM
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

## 13-வது திருத்தச் சட்டத்தை...

அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டி.ஈ.டபிள்யூ.குணசேகர, ராஜித சேனாரட்ன, டிலான் பெரேரா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

மாகாணசபை முறைமைகளை அறிமுகப்படுத்திய 13-வது திருத்தச் சட்டமூலத்தில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்கள் குறித்து இந்தக் குழுவினர் கடந்தவாரம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அரசியலமைப்புக்கு அமைய மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதைத் தாம் பிரேகரித்திருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் சேனாரட்ன, ஆனாலும் சிறிய குற்றங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்கள் பயன்படுத்தப்படுவது மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவானது அதிகாரங்களைப் பகிர்வதற்கான பொது வான இணக்கப்பாட்டைப் பெற்றிருப்பதாகவும் தமது குழு 13-வது திருத்தச் சட்ட மூல அமுலாக்கத்தை அர்த்தமுள்ளதாக்க விருப்பதாகவும் தெரிவித்தார். ஏற்கனவே அரசியலமைப்பில் இருப்பதை அமுல்படுத்துவதைப் பற்றியே நாம் ஆராய்ந்து வருகின்றோம். இது அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஆரம்பப் படிமுறையாக விருக்கும் என்றார் அவர்.

13-வது திருத்தச் சட்டமூலம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற இந்தியாவின் அழுத்தம் இருக்கிறதா எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரட்ன, எமது குழு சொந்த முயற்சியிலேயே இந்த ஆரம்பகட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தது. எனினும் பயங்கரவாதம் இராணுவ ரீதியாக ஒழிக்கப்பட்ட பின்னர் தேசிய பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது என்றார்.

### 13க்கும் அப்பால் இந்தியா

1987ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையிலேயே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கும் 13-வது திருத்தச் சட்டமூலம் உருவாக்கப்பட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு அமைய மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோதும், இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்தே இருந்தன.

ஆயினும் மாகாண சபைகளுக்கான காணி அதிகாரங்களோ அல்லது பொலிஸ் அதிகாரங்களோ பகிரப்பட்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெற்ற 15-வது சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை இனப் பிரச்சினைக்கு 13-வது திருத்தச் சட்டமூலத்துக்கு அப்பால் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்ததாக உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் தெரிவித்தன.

அதன் பின்னர் இந்த வருட ஆரம்பத்தில் இலங்கை வந்து சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் 13-வது திருத்தச் சட்டமூலத்துக்கு அப்பால்தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டுமென, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இந்தியா இவ்வாறான அழுத்தம் கொடுத்திருக்கும் நிலையில் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் எந்தவிதமான பொது இணக்கப்பாடும்காணப்படாத சூழ்நிலையில், ஆளும் கட்சியிலுள்ளவர்களை மாத்திரம் உள்ளடக்கிய புதிய குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. இக்குழு 13-வது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது தொடர்பில் விரைவில் தீர்மானமொன்றை அறிவிக்கும் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (ந-5)

Microsoft Certified
Systems Engineer / Administrator
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.03.2009 08.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

லாவண்யா
பல், மூக்குக்கண்ணாடி அகம்
552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை
யாழ் வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)
வடமராட்சி வாடிக்கையாளரின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறக்கப்பட உள்ளது. மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள், மிதப்பு பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.
நெல்லியடியில் பார்வையிடும் நேரம்: காலை 9 - 2 மணிவரை
உரிமையாளர் DR.றெஜி சொலமன்
T.P. வீடு: 222 5569, கடை: 222 9053
(C-2183)

வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை, தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி




பளபளப்புடன், எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன்மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம்செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத்தோற்றத் தரும்.
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
"சிவா நறுமணப்பூங்கா"
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)
(MANUFACTURED BY:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA SRILANKA AYY PRO NO REG NO A/L 250
(C-2185)

PENTIUM 4 COMPUTERS
1 Intel Mobile Processor, Intel Mother Board, 80GB Sata Harddisk, 512MB DDRII Ram, CD Writer, 15" LCD Monitor, ATX Black Casing, KeyBoard, Optical Mouse — 37,000/- Free: 1GB Pendrive, Duestcover, Mousepad
2 Intel 1.8Ghz Dualcore, Foxconn Motherboard, 80GB Sata Harddisk, 1GB DDRII Ram, LG Dvd Writer, 17" LCD Monitor, ATX Black Casing, KeyBoard, OpticalMouse — 45,000/- Free: 1GB Pendrive, Duestcover, Mousepad
3 Intel 2.2Ghz Dualcore, Foxconn Motherboard, 160GB Sata Harddisk, 1GB DDRII Ram, Samsung DvdWriter, 17" LCD Monitor, ATX HandleCasing, Keyboard, Optical Mouse, UPS 650W — 53,000/- Free: 2GB Pendrive, Duestcover, Mousepad
4 Intel 2.2Ghz Dualcore, Intel DG31 Motherboard, 160GB Sata Hartdisk, 1GB DDRII Ram, Samsung DvdWriter, 19" LCD Monitor, ATX HandleCasing, Keyboard, Optical Mouse, UPS 650W — 57,500/- Free: 2GB Pendrive, Duestcover, Mousepad
5 Intel 2.2Ghz Dualcore, Intel DG31 Motherboard, 250GB Sata Harddisk, 2GB DDRII Ram, Sony Dvd Writer, 19" LCD Monitor, ATX Handle Casing, Keyboard, Optical Mouse, UPS 650W — 61,000/- Free: 4GB Pendrive, Duestcover, Mousepad
6 Intel 2.8Ghz Core2Duo, Intel DG31 Motherboard, 250GB Sata Harddisk, 2GB DDRII Ram, Sony Dvd Writer, 19" LCD Monitor, ATX Candle Casing, Keyboard, Optical Mouse, UPS 650W — 67,500/- Free: 4GB Pendrive, Duestcover, Mousepad
1-2 Years Warrenty Vaild For One Week
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
பொன்விழா அதிரடிச் சிறப்புத் தள்ளுபடி விற்பனை
ஆரம்பக் கல்விமுதல் பல்கலைக்கழகக் கல்வி வரையான அனைத்துப் புத்தகங்களும் 10 % தொடக்கம் 50% வரையான விசேட விலைக் கழிவுடன் விற்பனையாகின்றன.
எம்மிடம்
சகலவிதமான பாடப் புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
பாடசாலைத் தர உள்ளீட்டுப் பொருட்கள்
ஆய்வுகூட உபகரணங்கள்
சங்கீத உபகரணங்கள்
புறொஜெக்டர், புறொஜெக்டர் ஸ்கிறீன்கள்
மக்னெற், பிளனல் போட் வகைகள்
மற்றும் அனைத்து ஸ்ரேசனரிப் பொருட்கள்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
M/S ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.5542 (C-2187)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.